893

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

893 / 4-57
893 / 4-57

-: ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் :-
[திருஎவ்வுள்ளூர்]

JL
N57.6.6
2107 44

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 238
2. 43-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 241
3. ஸ்ரீமச்சாரீரகஸுப்ரபாதம் 245
   [ஸ்ரீ. உப. வித்வான், சின்னமு சி. ர. ஸ்ரீநிவாஸபாட்ராசார்ய ஸ்வாமி திருக்குடந்தை.]
4. ஸ்ரீ தூப்புலம்மானின் அர்ச்சாவதார அநுபவம் 249
   [ஸ்ரீ. உப. கோடியாலம் துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதராஸ்.]
5. ஸச்சரித்ர ரக்ஷையும் ஸ்ரீதேசிகனும் 251
   [ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம், நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரண அத்யாபகர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]
6. பிறந்த பெருமை 255
   [ஸ்ரீ. உப. வேதாந்தவாவதூக, வித்வான், வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, வைஸ் ப்ரின்ஸிபால், ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]
7. செய்திகள் 258
8. புஸ்தகவிமர்சம் 260

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை அடியிற்கண்ட விலாஸத்திற்கே அனுப்ப வேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷெவிலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் கீழே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். சந்தாத்தொகை அனுப்பப்படாமல் பாக்கியிருப்பவர்கள் உடனே அனுப்பிவைக்கவும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்**, மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்றாகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ஸூ ஐப்பசி மீ { ஸஞ்சிகை 10

'அஹோபிலே காருடசைலமத்யே

க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।

லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்

லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।

ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

தர்மத்தைச் செய் என்று உபதேசிக்கிறது வேதம். தர்மம் மோக்ஷத்தைத் தரும் என்று கூறுகிறது குறள். அஹிம்ஸை உயர்ந்த தர்மம் என்று கூறுகிறது வேதம். புல் (அசேதனம்) எறும்பு (சேதனம்) முதலிய வஸ்துக்களுக்குங்கூட ஸ்ரீராமபிரானின் அனுக்ரகவிசேஷத்தினல் மோக்ஷங்கிட்டியதாக ஆழ்வார் அநுஸந்தித்துள்ளார். ஸத்யத்தைக் கடைப்பிடி என்று கட்டளையிடுகிறது வேதம். இம்மாதிரி வேதத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட ஹிந்து மதத்தின் கொள்கைகள் ஸத்யம், அஹிம்ஸை, தர்மம் முதலியன. இம்மாதிரி உயர்ந்த கருத்துக்களைப் பின்பற்றியே எல்லா மதங்களும் தோன்றின. இவைகளே மனிதனுக்கு ஜீவாதாரங்கள். இவைகள் புறக்கணிக்கப்பட்டால் மனிதன் மனிதத் தன்மையை இழக்கிறான்.

இவைகளை அடிப்படையாகக்கொண்டுதான் நமது ஸமூஹத்தில் பல்வேறு பாகுபாடுகள் தோன்றின. அவைகளுக்குள் ஏற்பட்டிருந்த ஒற்றுமையும் இவைகளை அடிப்படையாகக் கொண்டுதான் நிர்ணயிக்கப்பட்டது. இம்மாதிரி அடிப்படைத் தத்துவங்களின் நுட்பங்களை அறியமுடியாத நிலை ஏற்பட்டவுடன் ஸமூஹஒற்றுமை குலைய ஆரம்பித்தது.

உலகில்உள்ளஒவ்வொருவருக்கும்அறிவுவளர்ச்சியில் வேற்றுமை உண்டு. அதில் ஒற்றுமையைக் காணமுடியாவிட்டால் ஸமூஹத்தில் ஒற்றுமை ஏற்படாது. தன் அறிவுக்குத் தக்கபடி ஒவ்வொருவரும் ஹிந்துமதத்தின் அடிப்படைக் கருத்துக்களுக்குப் பொருள் கூற ஆரம்பித்தால் ஒற்றுமை குலையுந்தானே. ஒரு குடும்பத்தின் தலைவனுக்கு உட்பட்டு நடந்தால் குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தன் மனம் போனபடி நடப்பதென்றால் அமைதி நிலைத்திருக்கமுடியுமா?

திரிசங்குவுக்குப் புதிய ஸ்வர்க்கம் ஸ்ருஷ்டித்ததாகக் கேட்டால் நமக்கு மனத்திற்குப் புலப்படாத விஷயமாகத் தெரிகிறது. நம்ப முடியாததாக இருக்கிறது. செயற்கை க்ரஹம் பூமியைச் சுற்றிவருவதாக ஒருவர் சொன்னால் அத்துடன் பேச்சுத் தொடர்புகூட சிலர் வைத்துக்கொண்டிருப்பதாக உடனே நம்ப முடிகிறது. பஞ்சசீலக்கொள்கை என்று கூறி வருகிறோம். இதிலே ஒரு பெருமையைக் காண்பதாக எண்ணிக்கொள்ளுகிறோம். நம்மிடையிலே இக்கொள்கையை அனுஷ்டித்து வருகிறோமா என்று யோசிக்க அவகாசம் இல்லை.

அஹிம்ஸாமூர்த்தி என்று ஒருவரைக் கூறி அவரைப் பின்பற்றிவருவதாகவும் சொல்லிக் கொள்ளும் நாம் ஹிம்ஸை செய்வதற்குக்கூட தயங்குவதில்லை என்றால் நம்முடைய சொல்லுக்கும், செயலுக்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறது. வகுப்பு வாதங்கள் கூடாதென்று நாம் அதிகமாகக் கூற ஆரம்பிக்கவே வகுப்புக் கலவரங்கள்தான் அதிகரிக்கின்றன.

ஸமீபத்தில் ராமநாதபுரம் ஜில்லாவில் நடந்த கலவரத்தைக் கண்டு நாம் கலங்கத்தானே வேண்டும். இந்நிலைக்கு எவர் காரணமாயினும் அவரைக் கண்டிக்கவேண்டியது நியாயந்தானே. இம்மாதிரி கலவரங்களைத் தடுக்கவும், அமைதியை நிலைநாட்டவும் முயற்சிக்கவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ஜாதிவேற்றுமை வெறுக்கத்தக்கதென்றும் இம்மாதிரி கலவரங்களைத் தடுக்கவேண்டும் என்றும் கூறிக்கொண்டே அதே ஸமயத்தில் ஒரு பெரியார் இவ்வேற்றுமைகளை அகற்றவே கடவுள் விக்ரஹங்களை உடைத்தும், படங்களையும், புராணங்களையும், எரித்தும் பிரயோசனப்படாததால் காந்தி படத்தை எரிக்கப்போவதாகவும், அதுவும் பிரயோசனப்படாவிட்டால், ஒவ்வொருவரும் பலாத்காரத்தில் ஈடுபடவேண்டும் என்றுங் கூறியுள்ளார். ஏதோ பிதற்றல் என்று இதைப் புறக்கணிப்பது சரியா என்று யோசித்துப் பார்த்தல் மிகவும் அவசியம்.

ஒரு சிலருடைய வெறிச் செயலால்தானே ராமனுதபுரம் ஜில்லாவில் படுகொலைகள் நடந்தன. அப்படியிருக்க வகுப்புத்வேஷத்தைத் தூண்டிவிட்டு பலாத்காரத்தில் இறங்கியே இதைத் தீர்க்கவேண்டுமென்று சொல்வதைக் கேட்டுக்கொண்டு வாளாவிருத்தல் சரியாகுமா. இதுவே ஒரு கலவரத்தை உண்டாக்குமாயின் அதன் முடிவு பரிதாபகரமாக இருக்கும் என்பதில் ஸந்தேஹமுண்டா.

பாகிஸ்தான் கையாளும்முறை இதுதானே. நம் நாட்டுக்கு எதிராக ஒரு த்வேஷப்ரசாரத்தை உண்டாக்கி, தங்களுக்கு நாட்டில் ஒரு செல்வாக்கைத்தேடிக்கொள்வதுதானே அங்கு ஆட்சிபீடத்தில் உள்ளவர்களின் கொள்கை. அதைக் கண்டிக்கும் நமது அரசாங்கம், அதே போல் வெறிச் செயல்களையூட்டும் கூற்றுக்களை அடக்காமல் விட்டுவைப்பதின் நோக்கந்தான் என்ன? பஞ்சசீலக்கொள்கையின் போதனை இதுதானு?

யுத்தத்தைத் தவிர்க்கவேண்டும் என்று உறக்கக் கூறிவரும் ஒவ்வொரு அரசாங்கமும் ஆயுதங்களை உற்பத்தி செய்துகொண்டும் நாசகாரியாக ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதில் ஸாமர்த்யப் போட்டி போடுவதும், வெற்றி பெறுவதும் ஸமாதானத்தை நிலைநாட்டத்தானு?

குணம் என்பது ஸ்வபாவத்தினுல் ஏற்பட்டிருப்பதுபோல் சூழ்நிலையினுலும், பழக்கத்தினுலும் ஏற்படுவது இயல்பே. ஆஹாரத்திற்காக என்று மிருகங்களைக் கொல்பவர்கள் ரத்தப் பெருக்கைக்கண்டு பயப்படாமல் வெறிச் செயல்களில் ஈடுபடுவது ஸஹஜந்தானே. மிருகங்களைக் கொல்லுவதில் ஏற்படும் பாவம் அவைகளைத்தின்பதினுல் போகும்என்று கூறும்ஒரு வகுப்பினர் செய்யும் கார்யம் அஹிம்ஸையாகுமா?

மனது, வாக்கு, காயம், இவைகளினுல் த்ரிகாணசுத்தியாக ஹிம்ஸையைச் செய்யாமலிருப்பதுதானே அஹிம்ஸையாகும். இதையறிய முடியாமல் அஹிம்ஸோபதேசம் செய்வது நற்பயனைக் கொடுக்காது.

முற்காலத்தவர்கள் இவைகளைத் தெரிந்து கொண்டுதான் ஸமூஹத்திற்கு ஹிதோபதேசம் செய்வதற்கென்றே ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் உபதேசங்களை ஏற்றுக்கொண்டனர். அவர்களும் குறையற்ற குணங்களோடு கூடியவர்களாக இருந்தனர். ஆகவே அவர்கள் உபதேசத்தில் உண்மை இருந்தது. நமக்கு நம்பிக்கையும் உண்டு. ஆனுல் இக்காலத்திலோ சொல் ஒன்று, செயல் ஒன்று என்ற முறையைக் கடைப்பிடிப்பவர்களின் உபதேசத்தில் நமக்கு எவ்வளவு நம்பிக்கை ஏற்படும்.

யுத்தத்தில் ஈடுபடுபவர்கள் யுத்த தந்த்ரங்களைக் கையாளுவது இயல்புதான். முற்காலத்தில் யுத்தத்திலும் தர்மம் இருந்தது. அதர்ம முறையில் யுத்தத்தைக்கூட வெறுத்தனர். ஆனுல் இக்காலத்தில் யுத்தத்தின் முடிவு யுத்தபூமியில் ஏற்படுவதில்லை. பொது ஜனங்களிடையில் அவர்களுக்கு ஏற்படும் அல்லல்களினுல் முடிவு செய்யப்படுகிறது. இதே போல்தான் பொது ஜனங்களுக்கு அமைதியின்மை என்பது ஸர்வஸஹமான நிகழ்ச்சியாகிவிட்டது. இவைகளைத் தவிர்த்து மனோநிலையில் ஸந்தோஷம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதுதானே அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பு என்பதை எல்லோரும் உணர வேண்டும். அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் எதையும் பொதுமக்கள் ஆதரிக்கக்கூடாதென்

பதுடன் வன்மையாகக் கண்டிக்கவும் வேண்டும். வெறிச்செயல்களைத் தூண்டிவிடும் த்வேஷ ப்ரசாரங்களைக் கண்டிக்காமல் இருந்தால் ஸமூஹத்திற்குச் செய்யவேண்டிய பொறுப்புக்களை நாம் செய்தவர்களாக ஆகமாட்டோம். இது நமது பொறுப்பல்ல என்று எவரும் எண்ணக் கூடாது.

பக்கத்து வீடு நெருப்புப் பற்றி எரியும் பொழுது அதை அணைப்பதுடன் தன்னுடைய கூரை வீட்டையும் காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்கும் முதியோர்களையும் காம்பார்த்தது உண்டு. அவர்களைக் கண்டு பரிஹஸிக்கும் அப்பாவிகளை நாம் என்னென்று கூறுவது.

ஒரு இடத்தில் ஏற்படும் பூசல் மற்ற இடத்துக்குப் பரவாமல் தடுக்கவேண்டிய அளவில் மற்றொரு இடத்தில் பூசல் ஏற்படவோ வேறு வித கிளர்ச்சிக்கு வித்து விதைப்பதோ எவ்வளவு மதியீனம் என்பதை நாம் உணரவேண்டும்.

இம்மாதிரி நிலைக்குக் காரணம் நமது அலக்ஷியபாவமேதான். இவ்விடத்தில் நமக்கு ஒரு உதாஹரணம் ஜ்ஞாபகத்திற்கு வருகிறது. உலகமே மாயை, அஸத்யம் என்பவைகளை முக்ய கொள்கைகளாக உடைய பெரியோர்கள் உலகமேன்மைக்காக பாடுபடுவதும் நற்புத்தி புகட்டுவதும் ஸஹஜமாக இருக்கும்பொழுது உலகம் நித்யம், ஸத்யம் என்றெல்லாம் கூறும் நம்போன்றவர்கள் ஸமூஹமுன்னேற்றத்திற்காகச் செய்யவேண்டியவைகளை மறந்து இவைகளைக் கடமையாகக் கொண்டுள்ளவர்கள் என்று யாரோ தனிப்பட்டவர்கள் இருப்பதாகவும் எல்லாம் பகவத்ஸங்கல்பம் என்றெல்லாம்கூறிக் கொண்டு ஆலஸ்யபாவத்தைக் கையாளுவது காலநிலையில் நமக்குப்பலனளிப்பதில்லை என்று உணரவேண்டும். ஒவ்வொருவரும் தனக்காகவும், ஸமூஹத்துக்காகவும், [சரீரத்திற்காகவும், ஆத்மாவுக்காகவும்] பாடுபடவேண்டியது மிகவும் அவசியம், அவஸரமுங்கூட.

ஸ்ரீ மாலோல முத்ராலயத்தில்

கல்யாண பத்ரிகைகள், லெடர் ஹெட்டுகள், ரசீது புத்தகங்கள் மற்றும் தேவையான அச்சு வேலைகள் மிகச்சிறந்த முறையில் தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, இங்கிலீஷ் பாஷைகளில் குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுக்கப்படும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துசெய்து கொடுக்கப்படும். மதஸ்தாபனங்களுடைய வேலைகளுக்கும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை வெளியிடுவோர்களுக்கும் தகுந்த சலுகை காட்டப்படும்.

மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர், ஸ்ரீ மாலோல முத்ராலயம்,
30, பனகல் தெரு, திருவள்ளூர்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஆவணி மாதம் 28உ வெள்ளிக்கிழமை ராத்திரி தனெளரியிலிருந்து புறப்பட்டு 6மைல் தூரமுள்ள ரூர்க்கி எழுந்தருளினார். புறப்படும்போதே மப்பும் மந்தாரமும் லேசான தூறலுமாக இருந்தது. ரூர்க்கி எழுந்தருளிய பிறகு விடாமழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. அதனால் அன்றும் மறுநாளும் அவ்விடமே தங்கி இருக்கும்படி இருந்தது. 30உ மத்யானம் அவ்விடமிருந்து புறப்பட்டு 14மைல் தூரமுள்ள சுட்மல்பூர் எழுந்தருளினார். அவ்விடமிருந்து அன்று மத்யான்னம் 14 மைல் தூரமுள்ள ஹைரான்பூர் எழுந்தருளினார். புரட்டாசி மீ 1உ ராத்திரி 12 மைல் தூரமுள்ள ஸர்ஸாவாவுக்கு எழுந்தருளினார். 2உ ராத்திரி புறப்பட்டு 14மைல் தூரமுள்ள ஔரங்காபாத் எழுந்தருளினார். 3உ ராத்திரி புறப்பட்டு 12மைல் தூரமுள்ள லாடுவாவுக்கு எழுந்தருளினார். அவ்வூரிலுள்ள கெடியாரக் கடைக்காரர் சாமான்களை அனுப்பி அன்று ஆராதனத்தை நடத்திவைத்தார். அன்று ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் உத்ஸவத்தை உத்தேசித்து ஸேவை, வேதபாராயணம், க்ரந்தபாராயணம் துடக்கம் நடந்தது. 4உ அன்று மத்யான்னம் புறப்பட்டு 12மைல் தூரமுள்ள குருக்ஷேத்ரத்தில் பிர்லாமந்திருக்கு எழுந்தருளினார். 5உ த்வாதசியன்று டில்லியிலிருந்து ஸ்ரீ பத்மநாபஐயங்கார், ஸ்ரீ அனந்தாசாரியர், ஸ்ரீ S. கிருஷ்ணமாசாரியர் முதலியோர்கள் வந்திருந்தார்கள். அன்று ப்ரதோஷாராதனமும் நடந்தது.

குருக்ஷேத்ரம் என்பது ஒரு தர்மக்ஷேத்ரம். பாண்டவர்களுடைய கூடஸ்தர்களில் 'குரு' என்பவர் செய்த தபோபலத்தால் அது தர்மக்ஷேத்ரமாகி அவர் பெயரைக் கொண்டே குருக்ஷேத்ரம் என்று பெயருள்ளதாக ஏற்பட்டது. அந்த க்ஷேத்ரத்தில் பாம்சுக்கள் (அதாவது மண் முதற்கொண்டு) பரிசுத்தத்தைத் தரக்கூடியது என்று புராணவரலாறு. ஆகையால் அவ்விடமுள்ள தீர்த்தங்களைப்பற்றி கேட்க வேண்டியதில்லை. தீர்த்தங்களுக்கு விசேஷ மஹிமை உண்டு. அவ்விடத்தில் புஷ்கரம் தீர்த்தங்கள் போல ரொம்பவும் விசாலமான தீர்த்தம் இருக்கிறது. அதை ப்ரஹ்ம தீர்த்தமென்றும், குருக்ஷேத்ரதீர்த்தமென்றும் சொல்லுகிறார்கள். தென் தேசத்தில் நீராழி மண்டபம் மாதிரி நடுவில் சில கோயில்களைக் கட்டி அதற்குப் போக பாலங்களையும் கட்டி வைத்திருக்கிறார்கள். ஸ்யமந்தபஞ்சக தீர்த்தத்தில் அது ஓர் முக்ய தீர்த்தமென்றும் சொல்லுகிறார்கள். ஸ்தாணுஹ்ரதம் என்பது புராணப்ரஸித்த தீர்த்தமென்று சொல்லுகிறார்கள். அதிலிருந்து தீர்த்தம் ஓடிக்கொண்டிருக்கிறது.

அன்று ராத்திரியே புறப்படுவதற்கு ஸன்னத்தமாயிருந்தும் மறுநாளாவது தங்களுக்கு விராமம் வேண்டுமென்று யோகிகள் கேட்டுக்கொண்டதின்பேரில் குருக்ஷேத்ரத்தை விட்டுவிட்டு வேறு ஊரில் தங்குவதைவிட குருக்ஷேத்ரத்திலேயே அவ்விராமத்தைக் கொடுத்து தங்கியிருக்கலாமென்று திருவுள்ளம் பற்றி மறுநாளும் அங்கேயே எழுந்தருளியாகி இருந்தது. மறுநாள் அபிகமனம் ஆனதும் 'கீதோபதேசம் அவ்விடத்தில் நடந்தது' என்று சொல்லப்படுகிற 4மைல் தூரத்தில் உள்ள ஜோதீஸர் என்னுமிடத்திற்கு எழுந்தருளியாயிற்று. கீதையாகிய ஜோதிஸ் அங்குதான் உண்டானபடியால் அந்த இடத்திற்கும் அதன் பக்கத்தில் உள்ள ஸரஸிற்கும் ஜோதிஸர் என்று பெயரிடப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

முன்னாளில் குருக்ஷேத்ரம் என்பது ஸமவெளியான பூமியாக இருந்திருக்கக்கூடும். அது தர்மக்ஷேத்ரமானபடியால்தான் யுத்தமான யாகத்தை (அதாவது ரணயஜ்ஞத்தை) பரசுராமரோடு பீஷ்மரும், பிறகு கௌரவ பாண்டவர்களும் அவ்விடத்திலேயே செய்தார்கள். இப்போது பல பாகங்களில் வீடுகளைக்

கட்டிக்கொண்டு வ்யவஸாயமும் நடத்துகிறார்கள். பாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்கும் கூடஸ்தராக குரு என்பவர் இருந்தபோதிலும் குருக்ஷேத்ரமானது பாரதயுத்தத்திற்கு முன் துரியோதனாதிகள் வசமிருந்தபடியால் அவர்களை முக்யமாகக் கௌரவர்களென்றும் இவர்களை பாண்டவர்களென்றும் வ்யவஹரித்தார்கள் என்றேற்படுகிறது. 'குருநாடுடை ஐவர்கட்காய்' என்ற பாசுரத்தின் வ்யாக்யானம் இதற்கு ப்ரமாணமாகலாம்.

அங்கிருந்து (அந்த குருக்ஷேத்திரத்திலிருந்து) நாலைந்து மைல் தூரத்திலும் மற்றும் சுற்றுப் புறத்திலும் பாணதீர்த்தம் (அதாவது பீஷ்மருக்காக அர்ச்சுனனால் பூமியிலிருந்து உண்டுபண்ணப்பட்டது) சூர்யதீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கெழுந்தருளியிருந்த இரண்டு நாட்களும் ஒவ்வொரு வேளை நீராட்டத்திற்கும் சமீபத்திலுள்ள அந்தந்த தீர்த்தங்களுக்கு எழுந்தருளி நீராட்டம் ஆயிற்று.

புரட்டாசிமீ 6வ ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள நைலோகிரி என்னுமிடத்திற்கு எழுந்தருளினார். அவ்விடமிருந்து 8வ ராத்திரி புறப்பட்டு 12மைல் தூரமுள்ள கர்னால் என்ற ஊருக்கு எழுந்தருளினார். அவ்விடமிருந்து ராத்திரி புறப்பட்டு 16மைல் தூரமுள்ள படுகாமண்டி எழுந்தருளினார். 9வ ராத்திரி புறப்பட்டு 16மைல் தூரமுள்ள ஸெமால்கா எழுந்தருளினார். அன்று ஸ்வாதி நக்ஷத்ரமாகையால் பெரிய பெருமாளுக்குத் திருமஞ்சனம் நடந்தது. 10வ ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 16மைல் தூரத்திலுள்ள முர்தால் என்னுமிடத்திற்கு எழுந்தருளினார். 11வ ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 15மைல் தூரமுள்ள அலிபூர் எழுந்தருளினார். 12வ ராத்திரி புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள பழைய டில்லி யமுனைகரை குஷியா காட்டிற்கு எழுந்தருளினார்.

டில்லிவாஸிகளனைவரும் ஸுமார் 2 மைல் தூரத்திற்கு வந்து எதிர்கொண்டழைத்தார்கள். குஷியாகாட்டிற்கு எழுந்தருளினதும் ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டு நியமனம் பெற்றுக்கொண்டு போனார்கள். 13வ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம் சாற்றுமுறை, ஸ்ரீபாததீர்த்தம் கோஷ்டி விநியோகம் விமரிசையாக நடந்தது. ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம் யமுனைத்துறையில் நடந்ததுபற்றி ஸ்ரீ அழகியசிங்கர் உள்ளம் பூரித்து கீழ்க்கண்டபடி ஸாதிக்கும்படி இருந்தது.

'ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனை ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதாரமென்று மங்களம் முதலியதுகளில் அனுஸந்தித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது யமுனைத்துறைவன் (ஸ்ரீ ஆளவந்தார்) புநராவதாரமாக நாம் அனுஸந்திக்கும்படி இருக்கிறது. ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் யமுனைத்துறைவனாக இப்போது நமக்கு ஸேவை ஸாதிக்கிறார்.

ஆஸேதுஹிமாசலம் கிழக்கு மேற்கு பர்வதங்கள் இதற்குள் இருக்கும் இடங்களில் என்னைப்போலுள்ள மீமாம்ஸாசாஸ்த்ரபரிசயமுள்ளவர்கள் கிடையாது என்கிற பிருதத்துடன் ராஜஸபைக்கு எழுந்தருளின ஆளவந்தார் மாதிரி ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனும் அர்ச்சையில் கன்யாகுமரி முதல் பதரிகாச்ரமம் வரையில் பெருமாளையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு நம்மையும் அழைத்துக்கொண்டு ஸஞ்சாரம் செய்துகொண்டு இம்மாதிரி ஸம்ப்ரதாயம் உலகில் இல்லை என்று காட்டிக்கொண்டு ஸஞ்சாரம் செய்வதைப்பார்க்கும்பொழுது யமுனைத்துறைவனை மறுபடி அவதரித்தார் என்று நாம் இப்போது அர்ச்சாவதாரத்தில் அனுஸந்திக்கும்படி இருக்கிறது' என்று ஸாதித்தாயிற்று.

ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்தை அனுஸரித்து டில்லிவாஸிகள் புரட்டாசிமீ 13வ, 14வ, 15வ இம்மூன்று தினங்களும் யமுனைக்கரையிலேயே பெருமாளை விசேஷமாக ஆராதித்தார்கள். அம்மூன்று நாளும் மூன்று வேளையும் ஸ்ரீ அழகியசிங்கர் ,விகாஹே யாமு

நம் தீர்த்தம்' என்ற ச்லோகத்தை அனுஸந்தித்துக்கொண்டு யமுனையில் நீராடும்படியிருந்தது. டில்லிவாஸிகளுக்கு ஸௌகர்யமாக ஸேவை கிடைப்பதின் பொருட்டு புது டில்லிக்கு எழுந்தருளவேண்டுமென்றும், பெருமாளை உத்தேசித்தே புதிதாக கிணறும் ஏற்படுத்தி வேண்டிய இடவசதியும் ஸ்ரீ அனந்தசயனமய்யங்காரைக்கொண்டு செய்திருக்கிறோம் என்றும் ரொம்பவும் ப்ரார்த்தித்ததின்பேரில் 16௳ ராத்திரி புறப்பட்டு புதுடில்லிக்கு எழுந்தருளினர். அவர்களுடைய விசேஷ ப்ரார்த்தனையின்பேரில் சுமார் 3மைல் தூரத்திலிருந்து ஸ்ரீ அழகியசிங்கர் தங்கப் பல்லக்கிலும் பெருமாள் தங்கப்பல்லக்கிலும் எழுந்தருளினர். 14ந்தேதியே யமுனைக்கரையிலேயே ஸ்ரீதேசிகன் திருநக்ஷத்திரத்திற்காக ஸேவை உபக்ரமிக்கப்பட்டது.

17௳ வியாழக்கிழமை ஸ்ரீ தேசிகன் திருநக்ஷத்திர சாற்றுமுறை, ஸம்பாவனை கோஷ்டிகள் விமரிசையாக நடைபெற்றது. ராத்திரி டோலை உத்ஸவம் நடந்தது. 18௳ பெரிய பெருமாளுக்கு திருமஞ்சனம் நடந்தது. 18௳ முதல் நித்யமும் டோலோத்ஸவம், ஒவ்வொருவரும் உபயமாக செய்து வைத்தார்கள். 21, 23, 25 இந்ததேதிகளில் எல்லாப்பெருமாளுக்கும் திருமஞ்சனம் நடந்தது. 24௳ பெரிய பெருமாளுக்குத் திருமஞ்சனம் நடந்தது. 17௳, 21௳, 23௳ ஆகிய மூன்று தினங்களும் ஸ்ரீ அழகியசிங்கரை உபன்யாஸம் பண்ண வேண்டுமென்று ரொம்பவும் ப்ரார்த்தித்ததன் பேரில் மூன்று தினங்களும் ஸ்ரீ அழகியசிங்கருடைய உபன்யாஸம் நடந்தது. முன்னதாக விஜ்ஞாபித்து ஸ்ரீநியமனம் பெற்றுக்கொண்டு, உபந்யாஸத்தை டேப்ரிகார்ட் எடுத்துக்கொண்டார்கள். 27௳ (13-10-57) டில்லியைவிட்டு ஸஞ்சாரம் எழுந்தருளுவதாகத் திருவுள்ளம் பற்றியிருந்ததால், வெளியூர்சென்றிருந்த ஸ்ரீ அநந்தசயனமையங்கார் 8-10-57ல் வந்து சேர்ந்தார். ஸ்ரீமான்கள் வி.டி. கிருஷ்ணமாசாரியார், ஆந்திரப்ரதேச மந்திரி ஸஞ்ஜீவி ரெட்டி, மற்றும் சில மந்திரிகள் ஸ்ரீ பார்த்தஸாரதி ஐயங்கார் (போலீஸ் ஸூபரின்டென்டென்ட்) ஸ்ரீமான் தத்தார் மற்றும் பல ப்ரமுகர்களும் உத்யோகஸ்தர்களும் வந்து அவரவர்கள் பக்திக்குத்தக்கபடி பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவித்துவிட்டுச் சென்றனர். 26ம தேதியும் ஏதாவது உபந்யாஸம் ஸாதித்தருளவேணுமென ரொம்பவும் ப்ரார்த்தித்ததன்பேரில் உபன்யாஸம் செய்தருளியாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கர் உபன்யாஸங்களை டேப்ரிகார்ட் எடுத்துக்கொண்டார்கள். 26, 27. இரண்டுநாட்களிலும் எல்லாப்பெருமாளுக்கும் திருமஞ்சனம் நடந்தது. 27௳ பெருமாள் டில்லியைவிட்டெழுந்தருளுகிறபடியாலும், அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்தபடியாலும் அன்றுகாலை விச்வரூபம்முதற்கொண்டே ரொம்பபேர்கள் பெருமாளை வந்து ஸேவித்துப் போனார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் அங்கு எழுந்தருளினதற்கடையாளமாக ஒரு வ்ருக்ஷத்தை நடவேண்டுமென்றும், ஸ்ரீ பீஷ்மரை உத்தேசித்து அர்ஜுனன் பாணம்போட்டு வரவழைத்த தீர்த்தம் குருக்ஷேத்ரத்தில் பாணதீர்த்தம் என்னும் புண்யதீர்த்தமாக விளங்கிவருவதைப் போல் ஸ்ரீ அழகியசிங்கரை உத்தேசித்து நிர்மாணிக்கப்பட்ட இக்கிணற்று தீர்த்தத்தைக் கொண்டு எல்லாப் பெருமாளும் விசேஷ திருமஞ்சனம் தினந்தோறும் கண்டருளினபடியால் கங்கை யமுனை இவைகளைப்போல் இதையும் ஓர் சிறந்த புண்யதீர்த்தமாக டில்லிவாஸிகள் அபிப்ராயப்படுவதால் அதற்கு 'ஸ்ரீ அழய சிங்கர் கிணறு' என்று நாமகரணம் பண்ணி, அதேமாதிரி கல்வெட்டு வைக்கவேண்டுமென்றும் அதற்கு நியமனமாகவேணுமென்றும் வரவேற்புக்கமிட்டியார் ப்ரார்த்தித்ததின் பேரில் அந்தப்படி செய்யத் திருவுள்ளம்பற்றி நியமனமாயிற்று. ஸ்ரீமான் அநந்தசயனம் ஐயங்கார் தலைமையில் அதை நடத்தினார்கள். புதியதாக தங்கத்தில் தூபக்கால் பண்ணியனுப்பும்படி கும்பகோணம் ஸ்ரீ. ஸந்தானம் ஐயங்காருக்கு பணம் அனுப்பி நியமித்திருந்தது டில்லிக்கு வந்து சேர்ந்தபடியால் அன்று அதைக்கொண்டு அபிகமனாராதனம் நடந்தது. அன்றுமுதல் தங்க தீபக்காலுடன் தங்க தூபக்காலும் அபிகமன ஆராதனத்திற்கு உபயோகப்பட்டு வருகிறது. (தொடரும்)

ஸ்ரீ:

காஞ்சிபுரத்தில் எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும் பட்டு சேலைகள்

காஞ்சிபுரம் விலைக்கே சேலத்தில் கொடுக்கப்படும்

கல்யாணகாலத்தை முன்னிட்டு

காஞ்சீபுரம், கொள்ளேகாலம், தருமாவரம், ஆரணி, பட்டு சேலைகள், கண்ணைக் கவரும் சிறந்த நாகரீகமான பார்டர்கள் 6 கெ, 8 கெ, 9 கெ, 9½ கெஜம் சேலைகள் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

வெண்பட்டு 10X6, நூல் கோர்வை, சரிகைபேட் 10X6, 8X8, 9X9, ஜோடிகளும் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும்

எங்கள் கடைக்கு நேரில் விஜயம் செய்து ஜவுளிகள் வாங்கி திருப்தியடையக் கோருகிறோம்.

காஞ்சீபுரம் ஜவுளிக்கடை

கந்த விலாஸ்

போன் நெ. 123.

அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்

கடை வீதி: சேலம் 1.

உரிமையாளர்:-

அ. க. தங்கவேல் முதலியார்.

ஹெட் ஆபீஸ்:- காந்திரோடு, காஞ்சீபுரம். போன்: 12.

பிராஞ்சுகள்:-

213, தங்கசாலை தெரு	போன்: 71557,	போன்: 121,	போன்: 123,
மதராஸ்-1.	மைலாப்பூர்	கீழ் ரதவீதி	கடை வீதி
	மதராஸ்-4.	திருநெல்வேலி	சேலம்-1.

மேட்டூர், பென்னி மில் ஜவுளிகளும் கிடைக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன்
(37-வது பட்டம்) அருளிச்செய்த

ஸ்ரீமச் சாரீரக ஸுப்ரபாதம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஆகாசசப்தம் விசேஷ சப்தமாதலால் ப்ரஸித்தாகாசம் என்று பூர்வபக்ஷி சொன்னதும் யுக்தமன்று. சேதனர்களுக்கு அசேதனமான ஆகாசம் காரணமாக ஆகாது. விசேஷ சப்தமாயினும் ஸகல காரணத்வம் ப்ரஸித்தாகாசத்துக்குப் பொருந்தாதாகையால் இந்த ஆகாசசப்தம் உலக வ்யுத்பத்தியால் ஏற்பட்ட ப்ரஸித்தாகாசத்தைச் சொல்லாது. ஸங்கல்பத்தாலேயே ஜகத்ஸ்ருஷ்டி செய்யும் பரமாத்மாவையே சொல்லும். 'ஆகாசதே-ஆகாசயதி' என்று முன்பு சொன்னபடி அவயவவ்யுத்பத்தியைக்கொண்டு பரமாத்மாவையே ஆகாசசப்தம் சொல்லுகிறது என்று ஸித்தாந்தம்.

प्राणं सर्वाणि भूतान्यभिसमुपविशन्त्येनमभ्युज्जिहीते
सर्वं प्रस्तावमेषाह्यनुसरति परा देवतेत्यत्र वेदे ।
प्राणाधीनस्थितित्वेऽप्यखिलचिदचिदां काष्ठलोष्ठेष्वभावात्
त्वद्भूमैकान्तभावे सुखशयित समुत्तिष्ठ सुष्ठु प्रभातम् ॥

ப்ராணம் ஸர்வாணி பூதாநி அபிஸமுபவிசந்தி ஏநமப்யுஜ்ஜிஹீதே
ஸர்வம் ப்ரஸ்தாவமேஷாஹ்யநுஸரதி பரா தேவதேத்யத்ர வேதே ।
ப்ராணாதீநஸ்திதித்வேऽப்யகில சிதசிதாம் காஷ்டலோஷ்டேஷ்வபாவாத்
த்வத்பூமைகாந்தபாவே ஸுகசயித ஸமுத்திஷ்ட ஸுஷ்டு ப்ரபாதம் ॥

(ப-ரை) அகிலசிதசிதாம்— எல்லா சேதனாசேதனங்களுக்கும், ப்ராணாதீநஸ்திதித்வே அபி—முக்யப்ராணவாயுவுக்கு அதீனமான ஸ்திதியிருந்தாலும், காஷ்டலோஷ்டேஷு— கட்டை, கல் இவைகளில், அபாவாத்— ப்ராணாதீனமான ஸ்திதி இல்லாமையால், த்வத் பூமா ஏகாந்தபாவே— தேவரீருடைய மஹிமையொன்றிலேயே நோக்கமான அபிப்ராயத்தை யுடைய, (இது 'வேதே' என்பதற்கு விசேஷணம்.) ஸர்வாணி பூதாநி— எல்லா ப்ராணிகளும், ப்ராணம் அபி— ப்ராணனைக் குறித்து, (ப்ராணனிடம்) ஸமுபவிசந்தி— ஐக்யமாய்ச் செல்லுகின்றன. (லயமடைகின்றன.) ஏநம் அபி உஜ்ஜிஹீதே— இந்த ப்ராணனிடமிருந்து வெளிவருகின்றன. ஏஷா— இந்த, பராதேவதா— பரதேவதையானது, ஸர்வம் ப்ரஸ்தாவம்— எல்லா ப்ரஸ்தாவபக்தியையும், அநுஸாதி ஹி— அநுஸரித்திருக்கிறதன்றோ. இதி அத்ர வேதே— என்கிற இந்த வேதத்தில், ஸுகசயித ஸமுத்திஷ்ட ஸுஷ்டு ப்ரபாதம்— ஸுகமாக கண் வளர்ந்தருளும் ஹஸ்தீசனே திருப்பள்ளியெழுந்தருளவேணும். நன்கு பொழுது விடிந்தது.

(கருத்து) ஸர்வபூதங்களும் ப்ராணனிடத்தில் லயத்தையடைகின்றன: அதிலிருந்து உண்டாகின்றன. இந்த பரதேவதையானது ப்ரஸ்தாவபாகத்தில் உபாஸ்யதேவதையாக வருகிறது என்று சாந்தோக்யவேதத்தில் (1-11) சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பரதேவதை ப்ரஸித்த ப்ராணனாயிருக்கலாம்; ஏனெனில் ஸகல சேதனாசேதனங்களும் ப்ராணாதீனமான ஸ்திதியை (இருப்பை) யுடையவைகளாதலால்— என்ற சங்கை வரலாம்; அது உசிதமன்று. காஷ்டலோஷ்டாதிகளில் ப்ராணாதீனமான ஸ்திதியில்லை. ஆதலால் அந்த வேதம்— எல்லா ப்ராணிகளையும் உயிரோடிருக்கும்படி செய்வது எனகிற தேவரீர் மஹிமையையே முக்கிய நோக்காகக்கொண்டது. அவ்விதமான சாந்தோக்யவேதத்தில் ஸுகமாகக் கண் வளரும் அத்திகிரித் திருமாலே! திருப்பள்ளியெழுந்தருளாய் பொழுது நன்கு விடிந்தது.

இந்த ச்லோகம் ப்ராணாதிகாணத்தை விஷயமாகக்கொண்டது. சக்ரரின் குமாரரான உஷஸ்தி என்ற ருஷி ஒரு யாகம் செய்யுமிடத்தில் சென்று, ப்ரஸ்தோதா என்ற ஸாமகானம் பண்ணும் ருத்விக்கைப் பார்த்து 'ஓய்! ப்ரஸ்தோதாவே! ப்ரஸ்தாவம என்ற பக்தியில் எந்த தேவதை உபாஸ்யை' என்று கேட்க, அவர் அதை அறிந்தவரல்லாதலால் உஷஸ்தியையே அந்த தேவதை எது என்று கேட்டார். உஷஸ்தி ப்ரஸ்தாவபக்தி (பாகத்தில்) யில் ப்ராணன் என்ற தேவதை உபாஸ்யமென்று சொல்லி ஸர்வாணி ஹ வை .... என்றும் கூறினார். யாகத்தில் செய்யும் ஸாமகானத்தில் ஹிங்காரம், ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதீஹாரம், நிதநம் என்று ஐந்து பாகங்கள் (பக்திகள்) உண்டு. அதில் ஒரு பாகம் ப்ரஸ்தாவம்.

'प्राण इति होवाच, सर्वाणि ह वा इमानि भूतानि प्राणमेवाभिसंविशन्ति, प्राणमभ्युज्जिहते, सैषा देवता प्रस्तावमन्वायत्ता' (சா- i- 11) என்பது விஷயவாக்யம். இதன் பொருள் பதவுரையிலேயே காணலாம்.

இந்த அதிகாணம் அதிதேசாதிகாணம். முன் அதிகாணவிஷயவாக்யத்தில்போல இவ்வாக்யத்திலும் நிகிலஜகத்காரணத்வம சொல்லியிருக்கிறது. ஆதலால் ப்ராணன் என்ற சப்தத்தால் சொல்லப்பட்டவன் பரமாத்மா என்று முன் அதிகாணநியாயப்படி தீர்மானிக்கலாம். ஆயினும், அதிக சங்கையிருக்கிறது. அதைத் தீர்ப்பதற்காக இந்த அதிகாணம் ஏற்பட்டது.

அதிக சங்கை யெது என்னில் சேதனாசேதனப்ரபஞ்சம் ஆகாசத்திலிருந்து உண்டாவதையோ அதில் லயம் அடைவதையோ ஒருவனும் ப்ரத்யக்ஷத்தால் பார்க்கவில்லை. ப்ராணன் விஷயத்தில் அப்படியன்று, ஸகல பூதஜாதங்களும் ப்ராணாதீநமான ஸ்திதி ப்ரவ்ருத்தி, நிவ்ருத்திகளையுடையவையாக இருக்கின்றன என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணமாயிருப்பதால் ப்ராணனே உத்பத்திக்கும் காரணமாயிருக்கக் கூடும். இது லிங்கம். ப்ராணன் என்பது ரூடியால் முக்யப்ராணனைச் சொல்லும். இது ச்ருதி. ஆக, இந்த இரு ஹேதுக்களால் ப்ரஸித்த ப்ராணனே ஜகத்காரணமாகச் சொல்லப்படுகிறான்— என்று அதிக சங்கை.

இதற்குப் பரிஹாரம்— மூன்று ஹேதுக்களைக்கொண்டு அந்த சங்கைக்கு ஸமாதானம் சொல்லப்படுகிறது. (1) எல்லாம் ப்ராணனுக்கு அதீநமான ஸ்திதி முதலியவைகளை

யுடையவை என்பது ஸமஞ்ஜஸமன்று– பாராங்கல்லிலும் பட்ட மரத்திலும் ப்ராணன் இருக்கிறது. ஆனால் அவைகளின் ஸ்திதி முதலியவைகள் ப்ராணாதீனங்கள் அல்ல. அது அங்கு ஸூக்ஷ்மமாயிருக்கிறது. சேதனஸ்வரூபத்திலும் ப்ராணாதீனமான ஸ்திதி முதலியவைகள் கிடையா. (2) இந்த வாக்யமும் அநுவாதம் என்பது 'ஹ வை' என்ற பதங்களால் காட்டப்படுகிறது. (3) பரமாத்மாதான் எல்லா ப்ராணிகளையும் உயிரோடிருக்கும்படி செய்கிறான்; ஆதலால் அவனை 'ப்ராணன்' என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. முன் அதிகாணத்தில் ஆகாசசப்தம் பரமாத்மாவையே சொல்லுகிறது என்று எப்படிச் சொல்லப்பட்டதோ அவ்விதமே இங்கும் ரூடியால் ஏற்பட்ட பொருளை விட்டுவிட்டு 'ப்ராணயதீதி ப்ராண:' என்கிறயோகவ்யுத்பத்தியால் ஏற்படும் அர்த்தத்தையெடுத்துக்கொள்ள வேண்டும்.

यत् ज्योतिर्दीप्यते द्योः परमिह पुरुषेऽन्तःस्थितज्योतिरेत
दित्युक्तासीमदीप्तिः परमनुरुष एवेति निर्णीतिदक्षे ।
पादो विश्वानि भूतान्यमृतमिह दिवीतोऽवशिष्टा त्रिपादी
त्यर्थे छन्दोगवेदे सुखशयित समुत्तिष्ठ सुष्टु प्रभातम् ॥

யத் ஜ்யோதிர் தீப்யதே த்யோ: பரமிஹ புருஷேந்த:ஸ்திதஜ்யோதி
இத்யுக்தாஸீமதீப்தி: பரமபுருஷ ஏவேதி நிர்ணீதி தக்ஷே। [ரேதத்
பாதோ விச்வாநி பூதாந்யம்ருதமிஹ திவீதோऽவசிஷ்டாத்ரிபாதீத்யர்
த்தே சந்தோகவேதே ஸுகசயித! ஸமுத்திஷ்ட ஸுஷ்டுப்ரபாதம் ॥

(ப–ரை) யத் ஜ்யோதி:– யாதொரு ஜ்யோதிஸ்ஸானது, த்யோ:பரம்– அப்ராக்ருதமான திவ்யதேசத்துக்கு மேல் தீப்யதே– விளங்குகிறதோ, ஏதத்–அதுவே, இஹ புருஷே– இந்த புருஷனிடம், அந்த: ஸ்தித ஜ்யோதி:– உள்ளிருக்கும் ஜ்யோதிஸ், இதி– என்று, உக்த அஸீம தீப்தி:– சொல்லப்பட்ட எல்லையற்ற ப்ரகாசத்தையுடையவன், பரம புருஷ: ஏவ இதி– பரமபுருஷன்தான் என்று, நிர்ணீதிதக்ஷே– தீர்மானம் பண்ணுவதில் ஸமர்த்தமான, (இது சாந்தோக்யவேதே என்பதற்கு விசேஷணம்) விச்வாநி பூதாநி– ஸமஸ்தபூதங்களும், பாத:- ஓர் அம்சம், இத:– இதைவிட, அவசிஷ்டத்ரிபாதா– பாக்கி மூன்று அம்சங்கள், இஹ திவி– இந்த ஸ்ரீவைகுண்டத்தில், அம்ருதம்– நித்யங்களாக இருக்கின்றன; இதி அர்த்தே– என்னும் அர்த்தமுள்ள, சந்தோகவேதே– ஸாமகர்களுடைய வேதமான சாந்தோக்யத்தில், ஸுகசயித! ஸுகமாகக் கண் வளரும் ஹஸ்திசனே! ஸமுத்திஷ்ட– திருப்பள்ளியெழுந்தருளவேணும், ஸுஷ்டு ப்ரபாதம்– நன்கு பொழுது விடிந்தது.

(கருத்து) த்யோ: என்று சொல்லப்பட்ட அப்ராக்ருதமான தேசத்தில் எந்த ஜ்யோதிஸ் விளங்குகிறதோ; அதுதான் புருஷனின் சரீரத்துள்ளிருக்கும் ஜ்யோதிஸ்ஸும்– என்று சாந்தோக்யத்தில் (3–13–7) கூறப்பட்டிருக்கிறது. இந்த ஜ்யோதிஸ் சப்தத்தால் சொல்லப்பட்டவன் எல்லையற்ற மேன்மையற்ற ப்ரகாசமுடையவனான பரம

புருஷன்தான் என்று நிச்சயிக்கலாம். **'पादोऽस्य सर्वाभूतानि त्रिपादस्यामृतं दिवि** என்ற இஜ்ஜ்யோதிர்வாக்யத்திற்கு முன் கண்டத்திலுள்ள வாக்யம் இப்படி நிச்சயிப்பதற்குக் காரணமாயிருக்கிறது. இவ்விதமான சாந்தோக்யத்தில் ஸுகமாகக் கண் வளரும் அத்திகிரியருளாளனே! திருப்பள்ளியெழுந்தருளாய். நன்கு விடிந்தது.

இந்த ச்லோகம் ஜ்யோதிரதிகரணத்தை விஷயமாகக் கொண்டது. **'अथ यदतः परो दिवो ज्योतिर्दीप्यते विश्वतः पृष्ठेषु सर्वतः पृष्ठेषु अनुत्तमेषूत्तमेषु लोकेषु इदं वा व तत् यदिदमस्मिन् अन्तः पुरुषे ज्योतिः'** என்பது விஷயவாக்யம்.

இதன் பொருள்— வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்கு மேலும் ஸமஷ்டிஸ்ருஷ்டிக்கு மேலுமுள்ள அப்ராக்ருத ஸ்தானத்தின் மேல் இதற்கு மேல்பட்டதில்லாமல் எல்லாவற்றிற்கும்மேல்பட்ட உயர்ந்த லோகங்களில் எந்த ஜ்யோதிஸ்ஸு ப்ரகாசிக்கிறதோ, அதுதான் புருஷசரீரத்திலிருக்கும் ஜ்யோதிஸ்ஸு—என்பது 'பாதோऽஸ்ய ஸர்வா பூதாநி' என்ற ச்ருதியின் பொருள். எல்லாப் பூதங்களும் அவனுடைய ஒரு பாதம், நாசமில்லாத அவனுடைய மூன்று பாதங்கள் அப்ராக்ருதமான ஸ்தானத்திலிருக்கின்றன— என்பது.

'பாத:' என்பதற்கு அம்சம் என்று அர்த்தம். **'अंशवाची हि पादशब्दः'** என்ற அம்சாதிகரண ஸ்ரீஸூக்தி காண்க. பாத: என்பதற்கு கால்பாகம் என்றும் அர்த்தமுமில்லை. **'पादत्रिपादव्यपदेशश्च तदविषयोऽपि तद्देशतारतम्यस्यानुग्राहको भवति । अयं च विभागो न समचतुर्भागाभिप्रायः बुद्ध्यर्थः पादवत्- इत्युक्तत्वात्'** என்ற ஸ்ரீந்யாயஸித்தாஞ்ஜன ஸ்ரீஸூக்தி அநுஸந்திக்கத்தக்கது. 'ஸர்வா பூதாநி' என்பதற்கு கார்யமான ஜகத்துக்குள்ளிருக்கும் அசேதனத்துடன் சேர்ந்த ஜீவன்கள் என்று பொருள். **'सर्वाभूतानि इति कार्यजगदन्तर्गता चित् संसृष्टचेतना उच्यते'** என்ற ஜ்யோதிரதிகரண ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தி காண்க. 'த்ரிபாதஸ்யாம்ருதம் திவி'- த்யூஎன்று சொல்லப்பட்ட அப்ராக்ருதஸ்தானமான ஸ்ரீவைகுண்டத்தில் மூன்று அம்சங்கள் இருக்கின்றன. (1) போக்யம்' (2) போக்யோபகரணம், (3) போகஸ்தானம்- என்று அப்ராக்ருதங்களான மூன்று அம்சங்கள். அல்லது பகவானுக்கு பூஷணங்களாயும் அஸ்த்ரங்களாயுமுள்ள நித்யஸூரிகள் ஒருவகை. (இவர்கள் ஜகத்துக்குள்ளிருக்கும் வஸ்துக்களுக்கு அபிமானிகளாயுள்ளவர்கள்.) பகவானையனுபவிப்பதையே ஸ்வபாவமாக உடையவர்களான நித்யஸித்தர்கள் ஒரு வகை. முக்தாத்மாக்கள் ஒரு வகை ஆக மூன்று வகை. இங்கு **दिवीति अप्राकृतं स्थानमुच्यते, त्रिपात्वं च अप्राकृतैर्भोग्यभोगोपकरणभोगस्थानविशेषैर्वा, भूषणास्त्रादिरूपेण जगदन्तर्गतवस्त्वभिमानिभिर्नित्यैः भगवदनुभवमात्रपरैश्च नित्यसिद्धैः, मुक्तैश्चात्मभिर्वा संभवति'** என்ற ஜ்யோதிரதிகரண ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தி அநுஸந்திக்கத் தக்கது. 'இஹ திவி' என்பதற்கு இந்த ஸ்ரீவைகுண்டத்தில்- என்று பதவுரையில் பொருள் கூறப்பட்டது. இந்த- என்றால் ச்ருதிகளில் ப்ரஸித்தமான என்று பொருள். அல்லது இஹ என்பதை 'இஹ விச்வாநி பூதாநி' என்று அந்வயித்து இந்த ப்ரக்ருதி மண்டலத்திலிருக்கிற ஸர்வ ப்ராணிகளும்- என்றும் பொருள் கூறலாம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ தூப்புலம்மானின் அர்ச்சாவதார அநுபவம்

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரத்வாத் சாஸ்த்ரதீபப்ரதாநத: |
ஸ்ரீவேங்கடாத்ரிநாதோzஸௌ ஸாக்ஷாத் வேதாந்ததேசிக: ||

ஸதாசார்யரத்னமான ஸ்ரீமந்நிகமாந்தமஹா தேசிகனாலளிக்கப் பெற்று, தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வைத் தரும் மஹோபகாரங்களில் ஒன்றாய்த் திகழ்வது நம் ஸ்வாமியின் அர்ச்சாவதார அநுபவம். இவ்வநுபவம் அழியாவழகுடனும் அந்யாத்ருச்யமான ரஸபாவங்களுடனும் அமைந்த தெவிட்டாத தெள்ளமுதம்.

'என்னதியான் செய்கின்றேனேனனாதாருக்
கின்னடிமை தந்தளிப்பானிமையோர் வாழும்
பொன்னுலகில் திருவுடனேயமர்ந்த நாதன்
புனலாரும் பொழிலரங்கந்திகழ மன்னித்
தன்னகலமகலாத தகவாலோங்குந்
தகவுடனே தன் கருமந்தானே யெண்ணி
யன்னையெனவடைக்கலங்கொண்டஞ்சல்
[தந்தேன்
னழலாற நிழலார வளிக்கின்றானே.'
(அம்ருதாசுவாதினி)

[பரமபதநாதன் தன்னையடைந்தார்க்குக் கைங்கர்யஸாம்ராஜ்யத்தை யளிக்க ஸ்ரீரங்கத்தில் அர்ச்சாரூபியாய் நித்யவாஸம் செய்கிறான். அவனது கிருபை பிராட்டியின் ஸம்பந்தத்தால் மேன்மேலும் வளர்கின்றது. ஆச்ரிதர்களைக் காப்பதே தன் கடமையாகக் கொண்ட எம்பெருமான் பெற்ற தாய்போல் அடியார்களுக்கு அபயமளித்து ஸம்ஸாரதாபத்தையொழித்து தன் திருவடி நிழலை அளிக்கிறான்.]

2. மேற்கூறிய பாசுரம் பகவான் அர்ச்சாரூபமாகவும் எழுந்தருளி நமக்கு அருள் புரிகின்றானென்று சுருக்கமாகச் சொல்லுகின்றது. அர்ச்சையென்பது இடத்தாலும் காலத்தாலும் தூரமில்லாமல் ஆச்ரிதர்களுக்கு இஷ்டமான த்ரவ்யத்தைத் தனக்குச் சரீரமாக ஒப்புக்கொண்டு அதில் அப்ராக்ருதமான திருமேனியுடன் ச்ரிய:பதி பரம க்ருபையோடு எழுந்தருளியிருக்கும் ரூபம். பரரூபத்தைப் போல் ஸகல கல்யாண குணபரிபூரணனாய், மனிதர்கள் வீட்டிலும் கிராமங்களிலும் 'தாயப்பதிக' ளென்றழைக்கப்படும். ஸ்ரீரங்கம், திருமலை முதலான ச்லாக்யமான தேசங்களிலும் மலைகளிலும் ஸ்ரீயுடன் கூட பகவான் தன் லீலாவிபூதியில் அநுக்ரஹம் செய்ய ஸங்கல்பித்து எழுந்தருளியிருக்கிறான். தானே தோன்றியோ, அல்லது தேவர்களாலோ யோகஸித்தியடைந்தவர்களாலோ, மற்றும் அஹங்காரமமகாரமில்லாத மனிதர்களாலோ ப்ரதிஷ்டை செய்யப்பட்டு ஸர்வஸஹிஷ்ணுவாய் த்யானஸாதனமாய் தன் ஸௌலப்யத்தைக் காட்டி அபிநிவேசத்துடன் கோயில் கொண்டு ஸேவையளிக்கிறான். இந்த அவதாரம் ஸத்யம், சுத்தஸத்வமயம், மோக்ஷமளிக்கும். இவ்விதம் எம்பெருமான் தன் ஸௌலப்ய ஸௌசீல்யாதிகுணங்களுக்குப் பரவசனாய் திவ்யமங்களவிக்ரஹத்தோடிருக்கும் நிலை ஸாதுபரித்ராணத்திற்கும் அவனுடைய ஸர்வசேஷித்வத்திற்கும் ப்ரயோஜனமாகிறது.

3. நம் அருள் தரு மாரணதேசிகன், திருமங்கை மன்னனைப்போல் அர்ச்சாவதாரத்தில் ஊன்றியிருப்பவராவர். பகவானின் பரரூபத்தையுரைக்கும்போது 'ஆகமமாத்ரப்ரமாண:' என்றும், அர்ச்சாரூபத்தையநுபவிக்கும்போது 'பூஷிதச்ருதிஸீமந்த:' என்றும் அருளிச்செய்திருக்கிறார். அதாவது 'ச்ருதிசிரஸி விதீப்தே' 'வேதை: ச ஸர்வைரஹமேவ வேத்ய:' என்றபடி வேதாந்தத்தால் மட்டும் அறியப்படும் ஸர்வஸ்மாத்பரன் ஸகலமனுஜநயனவிஷயதாங்கதனாய் ப்ராக்ருதிமண்டலத்தில்

அர்ச்சையில் வீற்றிருக்கும்போது அந்த வேதாந்தங்களுக்கே பூஷணமாகிறான் என்று அநுபவம். பரவ்யூஹாதிரூபங்களே ஆச்ரிதர்க்காக அவர்களபேக்ஷித்தபடியிலே அவர்களால் செய்விக்கப்பட்ட பிம்பங்களில் பகவான் தன் எல்லையில்லாத தயையோடு தனக்கு அஸாதாரணமான திருமேனியுடன் நிற்கும் தசை அர்ச்சாவதாரமென்று நம் கவிவாதிஸிம்ஹத்தின் அருள்மொழி. ஆழ்வார்களைப்போல் அர்ச்சாவதாரவைலக்ஷண்யத்தை அதிகமாக வநுஸந்தித்த நம் குருமாமணி இதற்கு மூலகாரணமான பரத்வத்தையும் ஒவ்வோரிடங்களில் வெகு அழகாக அனுபவித்திருக்கிறார். இவ்வநுபவத்தினால் இந்த அர்ச்சாரூபம் இப்படிப்பட்ட பரமாத்மாவினுடையது என்று நாம் தெரிந்துகொள்ளுகிறோம். அர்ச்சாவதாரத்தின் பெருமையைக் காட்ட மற்ற அவதாரங்களை அதற்கு சேஷமாகவே அநுஸந்தானம்.

4. ஸர்வஜகத்துக்களையும், அவற்றிற்குக் காரணமான தத்வங்களையும் விளையாட்டுப்போல் தன் அர்ச்சாரூபமான திவ்யமங்களவிக்ரஹத்தில் ஆயுதங்களாகவும், ஆபரணங்களாகவும் பகவான் தரித்துக்கொண்டிருக்கிறானென்று நம் ஸ்வாமியின் மற்றோர் அநுபவம். இத்தோற்றத்தைக் கண்டு களிக்க நம் வேங்கடநாதனாலும், அவரைப் போன்ற 'தேவஜ்ஞா:' 'குணஜ்ஞா:' என்ற பராசர பரகாலாதிகளாலும்தான் முடியும். மற்றவர்கள் ஸேவிப்பது ஆயுதங்களையும், ஆபரணங்களையும்தான். ஆச்ரிதர்களைக் காப்பாற்றுவது தன் கடமை என்று ஸங்கல்பித்து பெருமாள் அர்ச்சாவதாரம் செய்வது முற்றிலும் அவன் தயாகார்யந்தானென்றும், அவனுடைய கல்யாணகுணங்கள் உயர்வறவுயர்ந்து அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்துற்கு சோபையை உண்டுபண்ணுவது, அவன் திருமார்பில் அகலகில்லேனென்றுறையும் தயாதேவியான பிராட்டியின் ஸம்ச்லேஷத்தால்தானென்றும், அத்தயையின் பரிவாஹங்களான ஸௌலப்ய ஸௌசீல்ய குணங்கள் இந்த அவதாரத்தில் அதிகமாக ப்ரகாசிக்கின்றனவென்று நம் கருணைவள்ளல் தன் 'தயாசதகத்திலும்' 'மும்மணிக்கோவையிலும்' அனுபவிக்கிறார். பாற்கடலான பரத்வத்தில் துழாய்முடி ஆதியஞ்சோதியின் ஸௌலப்யம் ப்ரகாசிக்க இடமில்லை. இன்னமுதக் கடலான அர்ச்சையிலோ பரத்வமும், ஸௌலப்யமும் சேர்ந்து ப்ரகாசிக்கின்றன. ஆகவே அர்ச்சாவதாரத்தின் ஏற்றத்துக்கு இதுவொன்றே போதும்.

5. 'நானாவுருவம் கொண்டு நல்லடியோர் வானாரின்பம் இங்குற வருதி' (மும்மணிக்கோவை) என்ற ஸ்ரீதேசிகனின் அனுபவத்தை எவ்வாறு எடுத்துரைப்பது. பூலோகத்தில் உன்னையடைந்தவர் 'இச்சுவைத் தவிர யான் ... ... அச்சுவைப் பெறினும் வேண்டேன்' 'வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:' என்றபடி முக்தர்களைப்போல் ப்ரஹ்மானந்தத்தை யநுபவித்து வாழவும் பரமபதத்திலுண்டாகும் ஆனந்தத்தை இந்த லீலா விபூதியில் நீயுமனுபவிக்கவும், அனேகவித அர்ச்சாரூபங்களுடன் அவதரிக்கிறாயென்று ஸம்போதனம். ப்ரதிபந்தகங்களெல்லாம் கழிந்தவுடன் பகவதநுபவத்தைத் தரும் நித்யவிபூதியைக்காட்டிலும் ப்ரதிபந்தகங்கள் இருக்கச் செய்தேயும் அவைகளைப் புறக்கணித்து பெறுவதெல்லாம் நாம் இங்கே பெற்றுவாழும்படி பகவதநுபவத்தைத் தரும் இல் லீலாவிபூதியின் விசேஷத்தைக் காட்டுவது அர்ச்சாவதாரமே.

'ஸ்ரீமாநசேஷஜநஸங்க்ரஹணாய சேதே ரங்கே புஜங்கசயநே ஸபஹாபுஜங்க:' (ந்யாஸதிலகம்) ஸர்வகாலத்திலும் எல்லாரையும் பிடிக்கத் திருவுள்ளமாய் ஸுந்தரரூபியான புருஷோத்தமன் பிராட்டியுடன் ப்ரணவவிமானத்தில் அரவணையில் யோகநித்திரை செய்கிறான் என்று ஸ்ரீதேசிகன் அநுபவித்து அடியார்களின் சரணாகதிக்கு அர்ச்சாரூபமே ஸுலபமான இலக்கு என்று காட்டித்தருமழகைப் பாருங்கள்.

6. ஸர்வஜ்ஞரான நம் ஸ்வாமியின் பாசுரத்தை ஆராய்ந்து ஸேவிப்பவர் மேற்கூறிய

(தொடர்ச்சி 254ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

ஸச்சரித்ரரக்ஷையும் ஸ்ரீதேசிகனும்

கலியின் கோலாஹலம் மலிந்த இக்காலத்திலும் ஸநாதநதர்மம் ஆங்காங்கு உயிர்வாழ்ந்து ஸர்வேச்வரன் உகக்கும்படி நிலைத்திருப்பதற்குக் காரணம் நம் பூர்வாசார்யர்களின் தன்னலம் கருதாத பரிச்ரமமே. இப்படி ஆஸ்திக மதத்தையும் தர்மத்தையும் பாதுகாத்துவரும் ஆசார்யர்களில் நடுநாயகமாய் விளங்கும் ரத்நங்கள் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனும், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹா தேசிகனும். இவர்கள் நமக்குச் செய்த மஹோபகாரங்களை வர்ணிக்க ஆயிரம் நா படைத்த ஆதிசேஷனாலும் இயலாது. ஆகிலும் முடிந்தவரையில் ஸமயம் நேர்ந்தபோது இவர்கள் செய்த உபகாரத்தை ஸ்மரிப்பதும், பிறருக்கு அறிவிப்பதும் நம் ஸ்வரூபப்ராப்தம். ஆகையினால் ஸ்ரீதேசிகன் இயற்றியருளிய 'ஸ்ரீஸச்சரித்ரரக்ஷை' என்கிற க்ரந்தத்தில் நிச்சயித்துள்ள அர்த்தங்களைச் சுருக்கமாக இருவர்களின் ஸம்வகதரூபமாக எடுத்துரைக்கிறோம்.

ஸுகுணன்:— ஸுசீலா! உன்னைப் டார்த்து நெடுநாளாகிறது. பால்யத்தில் நாமிருவரும் காவ்யங்களை வாசித்தோம். பிறகு நீ ஒரு மஹானோடு புறப்பட்டுத் தீர்த்தயாத்ரையாகச் சென்றுவிட்டாய். நான் இங்கு கிராமத்திலேயே இருந்து குடும்பத்தை நடத்திவருகிறேன். மேற்கொண்டு விசேஷமான விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஸந்தர்ப்பம் நேரவில்லை. நீ மஹான்களோடு அதிகமாகப் பழகியிருக்கிறபடியால் உன்னிடத்தில் சில ஸம்சயங்களைக் கேட்டுத் தெளியவாசைப்படுகிறேன்.

ஸுசீலன்:— மித்ர! உன்னுடைய ஸம்சயம் என்ன? கேள். எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன்.

ஸுகுணன்:— ஸுசீலா! ஸ்ரீவைஷ்ணவர்கள் சங்கசக்ரங்களால் புஜங்களில் அடையாளம் செய்துகொள்ளுகிறார்களே இது ப்ராமாணிகமா? தன்னுடைய சரீரத்திலோ பிறருடைய அங்கங்களிலோ நெருப்பால் சூடிட்டு வ்ரணத்தையுண்டுபண்ணுவது குற்றம் என்றும் அதற்குத் தண்டனையும், ப்ராயச்சித்தமும் ஸ்ம்ருதிகளில் சொல்லியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆகையினால் இது எப்படி நீதியாகும்?

ஸுசீலன்:— ஸுகுணா! நீ கேட்கும்கேள்விகள் மிகவும்ஸரியே. இந்த சங்கையைத்தான் சங்கித்து ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸச்சரித்ரரக்ஷையில் இதற்குத் தகுந்த ஸமாதானம் அருளிச் செய்திருக்கிறார். மஹான்களிடம் கேட்ட அதை உனக்குத் தெரிவிக்கிறேன். இக்க்ரந்தம் மூன்று அதிகாரங்கள் கொண்டது. அதில் முதல் அதிகாரத்தில் சங்கசக்ர தாரணத்தைப்பற்றியும் இரண்டாவதில் ஊர்த்வபுண்ட்ரதாரணத்தைப் பற்றியும் (திருமண் காப்பு) மூன்றாவதில் பகவானுக்கு நிவேதநம் செய்த அந்நத்தை புஜிப்பதைப்பற்றியும் விசாரித்திருக்கிறார்.

ஸுகுணன்:— முதலதிகாரத்தில் சங்கசக்ர தாரணத்திற்கு ப்ரமாணம் என்ன ஸாதித்திருக்கிறார்?

ஸுசீலன்:— ஸுகுணா! கவனத்துடன் கேள். ஆஸ்திகர்களாயுள்ளவர்கள் தன் இச்சையினால் தர்மாதர்மங்களை நிர்ணயிக்கக் கூடாதென்றும் சாஸ்திரத்தைக்கொண்டே நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் ஸ்ரீகீதாசார்யன் கட்டளை.

ஸுகுணன்:—இது தெரிந்ததுதான், ஆனால் சங்கசக்ரதாரணத்திற்கு ப்ரமாணமாக சாஸ்த்ரங்கள் இருக்கின்றனவோ?

ஸுசீலன்:— சங்கசக்ரதாரணத்தை ப்ராஹ்மணன் அவசியம் செய்துகொள்ளவேண்டும் என்பதை ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸபுராணங்கள் வற்புறுத்துகின்றன. ஆதர்வண மஹோபநிஷத்தில்:—

दक्षिणे तु भुजे विप्रो बिभृयाद्वै सुदर्शनम् ।
सव्ये तु शङ्खं बिभृयादिति ब्रह्मविदोविदुः ॥

(ப்ராஹ்மணன் வலது புஜத்தில் சக்ரத்தையும், இடது புஜத்தில் சங்கத்தையும் தரிக்க வேண்டும்) என்று விதிக்கப்படுகிறது.

ஸுகுணன்:— எதற்காக சங்கசக்ரங்களைத் தரிக்கவேண்டும்?

ஸுசீலன்:— 'विष्णु क्रान्तं वासुदेवं विजानन् विप्रो विप्रत्वं गच्छते तत्वदर्शी' என்று விஷ்ணுவை ஸர்வாந்தர்யாமியாய் அறிந்தவனே தத்வத்தையறிந்தவன் என்றும், அவனே உண்மை

யான ப்ராஹ்மண்யத்தை அடைகிறான் என்றும் சொல்லியிருப்பதால்ஸர்வாந்தர்யாமியாய் ஸர்வசேஷியாயிருக்கும் எம்பெருமானை உள்ளபடி உணர்ந்த பிராஹ்மணன் தன் சேஷத்வத்திற்கு உசிதமாய் சேஷியினுடைய அடையாளங்களான சங்கசக்ரங்களை தரிக்கவேண்டும் என்பது இந்த ச்ருதியின் கருத்து.

ஸுகுணன்:- ஸுசீலா! இப்படி பகவானுடைய சிஹ்னங்களை தரிப்பதனால் ஏதாவது பலனுண்டா?

ஸுசீலன்:- ஸுகுண! அதர்வவேதத்தில் **'एभिर्वयमुरुक्रमस्य चिह्नैरङ्किता लोके सुभगा भवेम; तद्विष्णोः परमं पदं ये गच्छन्तीह लाञ्छिताः'** என்று ஒரு வாக்யம் உள்ளது. இதில் 'எப்படிப்பட்ட நீசர்களாயினும் ஸர்வாந்தர்யாமியான பகவானுடையசிஹ்னங்களான சங்கசக்ரங்களை தரித்தார்களேயாகில் பரமபதத்தை அடைகிறார்கள். ஆகையால் நாமும் பகவானுடைய சிஹ்னங்களால் சரீரங்களில் அடையாளம் செய்து கொண்டு 'பரமபதம்' என்று ப்ரஸித்திபெற்ற ஸ்ரீவைகுண்டலோகத்தில் சென்று பகவானுக்கு அந்தரங்ககைங்கர்யம் செய்யும் பாக்யம் பெற்றவர்களாக ஆவோம்' என்று முமுக்ஷுக்களின் (மோக்ஷத்தை விரும்புகிறவர்களின்) அநுஸந்தானம் வெளியிடப்பட்டுள்ளது, இதில் **'अङ्किताः' 'लाञ्छिताः'** என்ற சொற்கள் நோக்கத்தக்கவை. ஆகையால் சங்கசக்ரதாரணத்திற்கு பரம்பரையாக பரமபதத்தில் பகவத்கைங்கர்யாநுபவம் பலனாகக் கூறப்பட்டுள்ளது.

ஸுகுணன்:- மித்ர! முற்கூறிய ப்ரமாணங்களில் கூறியுள்ள அடையாளம் சிலர் செய்து கொள்வதுபோல் சங்கசக்ரங்களை சந்தனத்தில் தோய்த்து சரீரத்தில் அடையாளம் செய்து கொள்ளலாமல்லவா? அக்னியில் சங்கசக்ரங்களைத் தாபம் செய்து (காய்ச்சி) தான் தரிக்க வேண்டும் என்று ஏற்படவில்லையே?

ஸுசீலன்:- ஸுகுண! நீ சொல்வது ஸரிதான். இந்த ப்ரமாணம் பொதுவாக தரிப்பதையே கூறியபோதிலும்; ரிக்வேதகிலத்தில் **'चक्रं बिभर्ति वपुषाऽभितप्तं बल देवानाममृतस्य विष्णोः । स एति नाकं दुरिता विधूय प्रयान्ति यद्यतयो वीतरागाः'** தேவர்களைப் பாதுகாப்பதும் எங்கும் நிறைந்த எம்பெருமானுடையதுமான தப்தமான (காய்ச்சப்பட்ட) சக்ரத்தை சரீரத்தில் தரிப்பவன் ஸமஸ்தபாபங்களையும்போக்கி ராகத்வேஷாதிகளில்லாத யோகிகள் அடையும் பரமபதத்தை அடைகிறான்' என்று கூறியிருப்பதால் முன் கூறிய அடையாளம் தப்தமான சக்ரத்தினால்தான் என்று ஸாமாந்ய விசேஷந்யாயத்தைக்கொண்டு நிச்சயிக்கவேண்டும்.

ஸுகுணன்:- மித்ர! அந்த ச்ருதியில் இருக்கும் **'अभितप्तं चक्रं'** என்ற சொற்கள் அக்னியில் காய்ச்சி உருக்கிய தங்கம் முதலானவைகளால் செய்யப்பட்ட சக்ரத்தை பூஷணமாக தரிப்பதைச் சொல்லுகிறது' என்றும் கொள்ளலாமல்லவா? பிறந்த ஐந்தாவது தினத்தில் குழந்தைகளுக்கு தோஷம் ஒன்றும் கெட்ட க்ரஹங்களால் ஏற்படாமலிருப்பதற்காகத் தங்கத்தால் செய்த சக்ராதிகளை தரிப்பிப்பது என்று ஜோதிஷசாஸ்த்ரங்களில் கூறியுள்ளதாகப் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதைத்தான் முன் கூறிய சில ச்ருதி சொல்வதாகக் கொள்ளலாகாதா?

ஸுசீலன்:- ஸுகுண! ஸாமவேதத்தில் சக்ரத்தினால் சரீரத்தில் தாபம் செய்துகொண்டவன் பரப்ரஹ்மத்திற்கு ஸமானமான போகத்தையடைகிறான்' [**'नेमिना तप्ततनुः ब्रह्मणः सायुज्यं सलोकतामाप्नोति'**] என்று சொல்லியிருப்பதால் அதை அநுஸரித்து சில ச்ருதி வாக்யத்திற்கும் அதே அர்த்தத்தைக் கொள்வது தான் உசிதம். மூன்று வேதங்களிலும் **'पवित्रन्ते विततं ब्रह्मणस्पते । प्रभुर्गात्राणि पर्येषि विश्वतः । अतप्ततनूर्न तदामो अश्नुते । शृतास इद्वहन्तस्तत्समासते'** 'வேதங்களையும், வைதிகர்களையும் காக்குமியல்பையுடைய பகவானே! தேவரீருக்கு ஆயுதமாயும், அடையாளமாயும், ஆபரணமாயுமிருப்பதால் சேஷபூதமாய் பரமபாவனமான சக்ரம் உலகத்தில் ப்ரஸித்திபெற்றிருக்கிறது. ப்ரபஞ்சத்திற்கு ப்ரபுவான தேவரீர் உமக்கு சேஷங்களான எங்களுடைய சரீரங்களை உமக்கு சேஷபூதமாய சரீரமாயுள்ள தப்தமான சக்ரத்தினால் அடையாளம் செய்து ஸ்வீகரிக்கிறீர். அப்படிப்பட்ட சக்ரத்தினால் சரீரத்தில் தாபம் செய்துகொள்ளாதவன் சரீரத்

தினுடையவும் மனத்தினுடையவும் அசுத்திகளைப் போக்காதவனுகையால் ப்ரஹ்மமான தேவரீரை அடையமாட்டான். ஸுதர்சனத்தைத் (சக்ரத்தை) தாபம் செய்து வஹிக்கிறவர்கள் கல்மஷங்கள் நீங்கி பரிபக்வமான ஜ்ஞானமடைந்து பரப்ரஹ்மமான உம்மை அடைகிருர்கள் என்று இம்மந்திரத்தினுல் மேற்கூறியவர்த்தம் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. 'चरणं पवित्रं' என்கிற காடகவாக்யத்திலும் முற்கூறிய அர்த்தமே சொல்லப்படுகிறது. இப்படி ப்ரத்யக்ஷமாய்ப் படிக்கப்பட்ட ச்ருதிவாக்யங்களிலும் ப்ரத்யக்ஷம்போல் ஓதப்பட்ட சில ச்ருதிவாக்யங்களிலும் ஸ்பஷ்டமாக இவ்வர்த்தம் கூறியுள்ளதால் இதில் கொஞ்சமும் ஸம்சயமேயில்லை.

ஸுகுணன்:- மித்ர! ச்ருதிவாக்யங்களில் கூறப்பட்டுள்ளதை தெளிவுபடுத்துவதற்காக ஏற்பட்ட ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணங்களால்தான் அர்த்தத்தை நிச்சயிக்கவேண்டும் என்றும் பெரியோர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். அப்படியில்லாவிட்டால் முற்கூறிய ச்ருதிவாக்யங்களுக்கு மற்றவர்கள் வேறு விதமாக அர்த்தம் செய்யவும் இடமுண்டல்லவா? ஆகையினுல் இவ்விஷயத்தில் ஸ்ம்ருதி முதலானவைகளும் எப்படியிருக்கின்றன? என்பதையும் ஆராய்ந்து எனக்குக் கூறவேண்டும்.

ஸுசீலன்:- ஸுகுண! சாண்டில்யஸ்ம்ருதியில் பசு, புத்திரன், வீட்டிலிருக்கும் பாத்திரம், முதலானவைகளை சங்க சக்ரங்களால் அடையாளம் செய்யவேண்டும். விஷ்ணுவின் பெயரையும் வைக்கவேண்டும்.

'पशुपुत्रादिकं सर्वं गृहोपकरणानि च ।
अङ्कयेच्छङ्खचक्राभ्यां नाम कुर्याच वैष्णवम् ॥'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுதர்மத்தில் யமகிங்கரஸம்வாதத்தில்— ஓ! கிங்கரர்களே! நீங்கள் பூலோகத்தில் சென்று பாபிகளான எல்லா மனிதர்களையும் இங்குகொண்டு வாருங்கள். இந்த லோகத்தில் யாரும் உங்களுடைய கட்டளையை மீறமாட்டார்கள். எல்லாரும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே நடப்பார்கள். ஆனுல் விஷ்ணுவின் முத்ரையை தரித்தவர்கள் மட்டும் உங்களுடைய கட்டளைக்கு உட்பட்டவர்களல்ல,

'भवतां भ्रमतामत्र विष्णुसंश्रयमुद्रया ।
विनाऽऽज्ञाभङ्गकृत्सनैव भविष्यति नरः क्वचित् ॥'

என்று யமன் சொல்லுகிருன்.

மத்ஸ்யபுராணத்தில்:—

मचक्राङ्कितदेहो यो मद्भक्तो भुवि दुर्लभः ।
नैवाप्नोति वशं मृत्योरप्याज्ञाभङ्गकृन्नरः ॥

என்று பகவானுடைய வாக்யத்தில் என்னுடைய சக்ரத்தினுல் சரீரத்தில் அடையாளம் செய்துகொண்டவன் புவனியில் துர்லபன் என்றும் அவன் பாபம் செய்தவனுயிருந்தபோதிலும் ம்ருத்புவசத்தை அடைவதில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீவிஷ்ணுதத்வத்தில்,

'चक्रादिधारणं पुंसां परसंबन्धवेदनम् ।
पतिव्रतानिमित्तं हि वलयादि विभूषणम् ॥'

ஸ்த்ரீகள் பர்த்தாவின் ஸம்பந்தம் அதாவது சுமங்கலியாயிருப்பதற் கடையாளமாக வளை மாங்கல்யம் முதலிய ஆபரணங்களை அணிவது போல் பரமாத்மாவின் ஸம்பந்தம் தனக்கு இருப்பதைத் தெரிவிப்பதின் பொருட்டு சங்க சக்ராதிகளைத் தரிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. மற்ற ப்ரமாணங்களெல்லாமிருக்கட்டும், ஐந்தாவது வேதமான பாரதத்தில் பீஷ்மபர்வத்தில் ஸ்ரீவ்யாஸபகவானே

'ब्राह्मणैः क्षत्रियैर्वैश्यैः शूद्रैश्च कृतलक्षणैः ।
अर्चनीयश्च सेव्यश्च नित्ययुक्तैः स्वकर्मसु ॥
सात्वतं विधिमास्थाय गीतः संकर्षणेन यः ।'

ப்ராஹ்மணன் முதலான நான்கு வர்ணத்தாரும் சக்ராதிகளை அடையாளமாகக் கொண்டு பாஞ்சராத்ரத்தில் சொல்லிய முறைப்படி பகவானை ஆராதிக்கவேண்டும்' என்று கர்மாங்கமாகவும் சொல்லியிருக்கிருர். ஸ்ரீவராஹபுராணத்தில் 'புஜத்தில் சக்ரத்தினுல் அடையாளம் செய்துகொண்டவர்கள் வஸிக்குமிடம் பரமபாவனமான க்ஷேத்ரம்' என்றும் பூதப்ரேத பிசாசாதிகளும் சாந்தியையடையும் என்றும் சொல்லியிருக்கிறது. கருடபுராணத்தில் சக்ராங்கனம் செய்துகொண்டவனுக்கே ச்ராத்தம் முதலிய வைதிக கர்மங்களில் தானம் கொடுக்கவேணும், மற்றவனை ச்ராத்தத்தில் போஜனம் செய்துவைத்தால் பித்ருக்களிடம் அசுத்த வஸ்துவைக் கொடுத்தவனுகிருன்.

'चक्राङ्किताय दातव्यं हव्यं कव्यं द्विजोत्तमैः ।
अचक्रधारिणं विप्रं यः श्राद्धे भोजयिष्यति ॥

रेतो मूत्रपुरीषादीन् स पितृभ्यः प्रयच्छति ।

என்றும், வாயவ்யபுராணத்தில்

'विद्याविभूषणं पुंसः तस्या वृत्तं विभूषणम् ।
विष्णुभक्तिर्विभूषास्य सा चक्राद्यङ्कभूषणा ॥

மனிதனுக்கு அலங்காரம் வித்யை. அந்த அறிவுக்கு பூஷணமாவது நல்லொழுக்கம் என்ற ஸதாசாரம். அந்த ஆசாரத்திற்கு விஷ்ணுபக்தி அணியாகும். அந்த விஷ்ணு பக்தி சங்கசக்ராங்கனத்தை ஆபரணமாகக் கொண்டது' என்றும் விளக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற அனேகம் பாஞ்சராத்ர வசனங்களும் சங்கசக்ரதாரணத்திற்கு ப்ரமாணங்களாயுள்ளன. இப்படி ச்ருதி ஸ்ம்ருதிகளைப் பராமர்சிக்காவிட்டாலும் இந்த சக்ராதிதாரணம் ப்ராமாணிகமேயாகும். **'आत्मदास्य हरेः स्वाम्यं स्वभावं च सदा स्मर'** என்று பகவான் ஸ்வாமி என்றும் அவனுக்குத் தான் தாஸபூதனென்றும் எப்போதும் அனுஸந்தானம்செய்ய வேணும் என்று பொதுவாக விதியிருப்பதால் அதற்கு அநுகுணமாக அனுஷ்டிக்கப்படும் சக்ராதிதாரணமும் ச்லாக்யமேயாகும். ப்ரத்யக்ஷ ச்ருதிஸ்ம்ருதிவிரோதம் இல்லாமலிருக்கும் சிஷ்டாசாரமும் ப்ரமாணம் என்று மீமாம்ஸையில் ஹோலாகாதிகரணத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஸுகுணன்:- ஸுசீலா! என்னுடைய ஸந்தேஹம் அனேகமாகத் தீர்ந்துவிட்டது. ஆனால் ஒரு ஸம்சயம் மாத்ரமுள்ளது. யாருடைய சரீரத்திலும் புண்ணை உண்டுபண்ணக்கூடாது' என்று ஸ்ம்ருதிகளில் நிஷேதம் இருப்பதாகக் கூறப்படும் சங்கைக்குப் பரிஹாரமென்ன?

ஸுசீலன்:- ஸுகுண! விசேஷவிதி இருக்கும்போது பொதுவான நிஷேதம் அதைத் தவிர மற்றதையே கூறும் என்று சாஸ்த்ரமறிந்தவர்களின் நிர்ணயம். ஆகையால் கீழ்க் கூறின ச்ருதி ஸ்ம்ருதி முதலியவைகளால் விசேஷித்து சக்ராதிதாரணம் விதிக்கப்பட்டபடியால் அதை ஸ்ம்ருதி நிஷேதிக்காது. மற்ற விஷயங்களில் புண் உண்டுபண்ணுவதையே தடுக்கிறது. **'न हिंस्यात्सर्वभूतानि'** என்று பொதுவாக ஹிம்ஸையை நிஷேதித்து, யாகத்தில் **'अग्नीषोमीयं पशुमालभेत'** என்று பசுவை விசஸனம் (கொல்வது) செய்யும்படி விதித்திருக்கும் வசநங்களுக்கு இப்படியே தாத்பர்யம் கொள்கிறோம். அப்படியில்லாதபோது விசேஷித்து விதிக்கும் வசநங்கள் வ்யர்த்தங்களாய்விடும்.

ஸுகுணன்:- மித்ர! உன்னுடைய உத்தமமான உபதேசத்தால் இவ்விஷயத்தில் என்னுடைய ஸம்சயம் அறவே தீர்ந்துவிட்டது. இப்படி நமக்கு ஸ்ரீதேசிகன், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் இவ்விருவாசிரியரத்னங்களும் க்ரந்தரூபமாயும், உபதேசம் செய்து அனுஷ்டிப்பித்தும் காட்டாமல் போனால் எப்படி இக்காலத்தில் இப்படிப்பட்ட கர்மங்கள் நிலைத்திருக்கமுடியும்? இவர்களை ஆசாரியர்களாகப் பெற்றது நம் பாக்யமேயாகும். இருவரும் சேர்ந்து

'चक्रादिलाञ्छनभृतः सुधृतोर्ध्वपुण्ड्रान्
न्यस्तात्मनो भगवतश्चरणारविन्दे ।
तद्भुक्तभोगरसिकांस्त्रिदशेन्द्रवन्द्यान्
पुंसः प्रमाणशरणान् शिरसोद्वहामः ॥

என்று அநுஸந்திக்கிறார்கள்.

(252ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அர்த்தங்களையும் இன்னும் அதில் பொதிந்து கிடக்கும் ச்ருதிசோதிதமான அனேக தாத்பர்யரத்னங்களையும் அறிந்து அனுபவிக்கலாம். அர்ச்சாவதாரத்தைப் பற்றின ஸாரார்த்தங்களையெல்லாம் உட்கொண்டிருக்கும் இப்பாசுரத்தின் அருமை பெருமைகளைச் சொல்லி முடியாது.

"அமலனுமக்கு அளித்த பெயரொடும்,
கமலையுகந்தளித்த விருதொடும்,
நல்லாருலகம் நற்பதமெய்திட,
பல்லாண்டுமென்றிசை பாடுவமே".

ஸ்ரீ:

பிறந்த பெருமை

'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச' இவ்வாக்யம் எல்லோரும் பெரும்பாலும் எடுத்தாளும் ஒன்று. இதை முதன் முதல் அடியேன் ஆசார்யன் ஸந்நிதியில் செவிமடுத்தபோது ஓர் சிறு ஸம்சயத்தை இதன் பொருள் பற்றி விண்ணப்பித்தேன். அடியேன் முன்பே ஸ்வல்பம் வேதாந்தவ்யுத்பத்தி பெரியோரிடம் பழகிப்பண்ணியிருந்ததுண்டு. பிறந்த தடங்களும் மரிக்கும் தன்மையனவே. ஆயினும் மரித்தவன் மறுபடி பிறந்தே தீருவான் என எங்ஙனே சொல்லலாகும். மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரானும் உண்டன்றோ? அவன் இத்திசைக்கு என்றும் பிணைகொடுக்கிலும் போகவொட்டானல்லவா? என்பது அடியேன் ஐயம். இதற்கு சிலர் இவ்விதம் விடை தரவிழையலாம். அதையும் அடியேன் எதிர்பார்த்தே இருந்தேன் அப்போது. இவ்வாக்யம் பெரும்பாலும் நிகழும் நிகழ்ச்சியைக்கொண்டு பிறந்த ஓர் பொது விதி. வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியாயினும் “ஜகதிபவிதாகச்சித்தைவாதஜீஹாஸிதஸம்ஸ்ருதி:” என்றபடி மோக்ஷாதிகாரி எங்கோ ஓர் இடத்தில் அருபொருளாய் அன்றோ இருப்பது? என்று சிலர் அபிப்பிராயம் கொண்டாலும், அதை நாம் இங்கு நன்கு பராமர்சிக்கவேணும். “த்ருவ: த்ருவம்” அதுவும் திண்ணம், இதுவும் திண்ணம் என்று, ஜநநமரணபரம்பரையை நெடுகத்தொடரக்கடவதாக நிச்சயித்துக் கூறும் இக்கீதவாக்யம், “பெரும்பாலும் இப்படித்தான் நடக்கிறது” என்று கூறுவதாக எங்ஙனம் கொள்ளத்தகும்! அப்படி கொண்டாலும் “நாம் கொலை செய்யப் புகுந்தோமே” என்று வீணில் அஞ்சி, மனங் கலங்கிய அர்சுனனை இதனால் தெளிவித்ததாய் எப்படிப்ரகாரணம் அமையும்? பரமக்ருபையுடன் பளிச்சென்று சிறிதும் ச்ரமமின்றி ஆசார்யன் அடியேனுக்கு இதன் ஆழ்பொருளை அறிவித்தார். ஆச்சர்யத்தில் ஆழ்ந்தேன். பிறப்பு இறப்பில் மூட்ட, இறப்பு பிறப்பில் மூட்ட, இதுவே யாத்ரையாக இருக்கும் உலகம் என்றார். பிறப்பிறப்புப் பிணிமூப்புகள் உடலெனும் அசேதநப்பொருளுக்கே என்றார். இறந்தவன் சேதனனெக் கொண்டு, அவன் மறுபடி பிறந்தேயாகவேணும் என்பதில்லையே என்ற அடியேனுடைய தவறான ஆக்ஷேபத்தைத் திருத்தியருளினார்.

இங்கு மேல் எழுதப்புகுந்த விஷயத்தைச் சேர இச்சம்பவம் நினைவிற்கு வந்ததாகையால் இதை முதலில் ப்ரஸ்தாவித்தேன். இதிலிருந்து “பிறந்தது” என்னும் சொல் சரீரத்தின் ஓர் மாறுபாட்டைக் குறிக்கும் என்றதாயிற்று. ஆயினும் உலகத்திலும் சாஸ்த்ரங்களிலும் ஜீவனையும் “பிறந்தான்” என்று கூறுமிடங்கள் பல உண்டு. அவைகளுக்குக் கருத்து “ஜீவன் இருக்குமிடத்தின் மாறுபாட்டை இடமுடையவன்பால் சுமத்திச்சொல்லுவதே யாகும். இவ்விதக்கருத்திலேயே இக்கட்டுரை நெடுக இப்பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

“ஸ்ரீவைஷ்ணவன்” என வாழும் வண்மையே மிகச்சிறந்தது என முன்னோர்கள் மொழிவர். இதுபோன்ற விஷயங்களில் ஏற்றத்தாழ்வுகளை, கண்முதலியனகொண்டு காணவியலாது. பின்னை, சாஸ்த்ரங்கை விளக்காக நாம் நிச்சயிக்குமத்தனை. ஓர் ப்ரமாணம் கூறுவதைக் கேட்போம். குடும்பத்தில் குழந்தை பிறக்கிறது. அங்கு அது சாதாரண நிகழ்ச்சியாகவே கொள்ளப்படலாம். ஆயினும் குழந்தை பிறக்கும்போது அதன் பித்ருபிதாமஹர்வஸிக்கும் வானுலகத்தை, நான் பார்க்க இயலுமாகில் அங்கு நடக்கும் சில அஸாதாரண நிகழ்ச்சிகள் நமக்கு விஸ்மயரஸாவஹங்களாம். பொதுவில் பித்ருக்கள் தமது மரபில் குழந்தைகள் தோன்றுவதைப்பெரிதும் விரும்புவர். தமது ஸந்ததியில் தோன்றினவன் வைதிக கர்மாக்களை ச்ரத்தையுடன் செய்யும்போது அவனுடைய கேசத்தினின்றும் தேஹத்தினின்றும் உடலிலுடுத்திய வஸ்த்திரத்திலிருந்தும் பெருகும் நீரைப் பருகிக்களிப்பர். அவ்விதம் விரும்பும் அவர்களே, தமது குலத்தில் சில

குழந்தைகள் பிறக்கும்போது அவைகளைச் சீற்றத்துடன் சபித்துக்கொட்டுகிறார்களாம். வசனம் கூறுகிறது. ‘‘ஆஜந்ம மரணம் யஸ்ய வாஸுதேவோ நதைவதம்’’ அவர்கள் முக்காலம் அறிந்தவர்களல்லவா? இக்குழந்தை வளர்ந்து முதிர்ந்து முடியும்வரை மாதவனை மனதில் கடுகளவேனும் கொள்ளப்போவதில்லை’’ என்று அவர்கள் உணர்ந்து விடுகிறார்களாம், உடனே உதடுகள் துடிக்க, கண்கள் சிவக்க, சுடு சொற்களை வாரி வீசுகிறார்கள். ‘‘பாஜிஷ்ட ஸ நோ வம்சே’’ இது குழந்தை பிறக்குமுன் இடும் சாபம். இவ்வித குழந்தைகள் நமது வம்சத்திற்கு வாய்க்கவேண்டா. ஆனால் ஈச்வர ஸங்கல்பம் என்பது ஒன்று உண்டல்லவா? அதனால் இவர்கள் சாபத்தையும் மீறி குழந்தை பிறந்ததாகக்கொள்வோம். அப்போது அவர்கள் சாபமும் அதற்கேற்ப மாறுபடுகிறது. ‘‘ஜாதோ வா த்ராக் விபத்யதாம்’’ அட! பிறந்துதான் ஆயிற்று. ஆயினும் திடீரென்று தீயிலோ, தண்ணீரிலோ கண்டம் உண்டாகி மாண்டதென்று நாம் கேட்கப்போகிறோமோ? என்று அவர்கள் நினைவு இங்ஙனம் கொதித்திருக்குமாம். இவ்விதம் வைஷ்ணவனாக வாழப்பிறக்காதவன் பிறக்கும்போது பித்ருலோக மடங்களும் பெரும் கொதிப்படைந்திருக்கும்படி ப்ரமாணங்களில் கண்டோம்.

இனி ஸ்ரீவைஷ்ணவன் என்பானொருவன் இம்மண்ணுலகில் முதலடி இடும் வேளையில் அவனுடைய பித்ரு பிதாமஹர் அடைவுகெடச் செய்யும் ஸஸம்ப்ரமசேஷ்டிதங்கள் சிலற்றை இனிக்காண்போம். ‘‘ஆஸ்போடயந்தி பிதர:’’ வைஷ்ணவனாய் வாழப்போகும் குழந்தை பிறந்ததும், பித்ருக்கள், மனதில் ஸந்தோஷம் மறுகாலிட்டுப்பாய, அது வெளியில் வழிந்தோடியதோ வென்னலாப்படி, கைகொட்டி ஆர்பரித்தார்கள். ‘‘ப்ரந்ருத்யந்தி பிதாமஹா:’’. கிழவர்கள் கூத்தாடுகிறார்கள். என்ன விநோதம்? என்ன ஸந்தோஷம்? பாருங்கள். கிழவர்களும் குமரர்கள் ஆயினர். இவ்வளவுக்கும் காரணம் என்ன? ‘‘வைஷ்ணவோ ந: குலே ஜாத:’’ நமது குலசேகரனாய் ஓர் விஷ்ணு பக்தன் தோன்றினான். ஆயின் உங்களுக்கு அவனால் ஏற்படும் ப்ரயோஜனம் என்னவோ? ‘ஸ ந: ஸந்தாரயிஷ்யதி’ கேசவன் தமர், கீழ்மேல் எழெழு பிறப்பும் வாழ்வு பெறும்படி மஹாப்ரபாவராய் அன்றோ இருப்பது. துர்கதியில் நின்று தவிக்கும் எங்களையும் நற்கதிக்குயர்த்துமளவு அவர்களிடம் பகவத் கடாக்ஷம் எறிப்பாயும். இவ்விதம் வைஷ்ணவக் குழந்தை பிறந்த பெருமை நேர் பொருளிலும், எதிர்மறைப் பொருளிலும் எடுத்துக்காட்டப்பட்டது. இனி வைஷ்ணவன் லக்ஷணம் கூறும் வாச்யங்களைப் பார்ப்போம்.

‘‘யே கண்டலக்நதுளஸீ நளிநாக்ஷமாலா:’’ திவ்யதம்பதிகளின் அபிமான பாத்ரம் தாம் என்னுமிடம் தோற்ற, அவர்களின் நித்ய ஸாந்நித்யம்பெற்ற ‘‘தாமரை துளஸி’ இவைகளின் மணிமாலைகளால் அணிசெய்யப்பெற்ற அகன்ற மார்பினர். ‘‘யே பாஹுமூலபரிசிந்ஹிதசங்கசக்ரா:’’. தம்முடைய ரக்ஷார்த்தமாகவும் தம்முடைய தாஸத்வஸ்வபாவத்துக்கு நிரூபகமாகவும் இரு தோள்களிலும் ச்ரிய:பதியின் சங்குசக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு ஒளிருமவர். ‘யே வா லலாடபலகே லஸதூர்த்வபுண்ட்ரா:’. உலகளந்தானுடைய ஊர்த்துவமுகமான திருப்பாதத்தை நினைவுறுத்தும் திருநாமத்தை தமது நெற்றியில் இடப்பெற்று இலங்குமவர். இப்படியில் நிற்பவர் நிகரற்ற வைஷ்ணவர். ‘‘தே வைஷ்ணவா புவநமாசு பவித்ரயந்தி’’. ஜங்கமபகவதாலயங்களான இவர்கள் திருவடி உழக்கிய தூசு பெற்று பாருலகமடங்களும் பரிசுத்தமாயிற்று. மரித்த உயிர்களை யமனுலகம் இட்டுச் செல்லும் நமன் தமர்களும் இவர்களை அணுக அஞ்சியோடும்படி இருக்கும் இவர்கள் ப்ரபாவம்.

‘‘ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே’’ ஸ்வபுருஷம் பாசஹஸ்தம் ஒரு ஸமயம், யமன், தன்னுடைச் சேவகன், கையும், பாசமும், சூலமும், நாயுமாய் பூவுலகம் நோக்கிப் புறப்படுவதைக் கண்டான். ஸ்ரீ வைஷ்ணவரும் அல்லாதாரும் கலந்து நிற்கும் உலகத்தில், ஸ்ரீவைஷ்ணவருடைய தேஹாவஸாநத்தில் அவர் வாசியறியாதே இவன் அவர் முன்னே போய் நிற்கில் செய்வதென் என்று துணுக்குற்றான்

அவனுக்கு உபதேசிக்கிறான் யமன். ஸ்வபுருஷன் தன் அந்தரங்கச்சேவகனுகையாலே, அவனிடம் லஜ்ஜையற்று வேறு வழியின்றி, "ஸ்ரீ வைஷ்ணவர் பக்கல் தன் ஆஜ்ஞை விலை செல்லாதென்ற விஷயத்தை வெளியிடுகிறான். தன் மேன்மைசொல்லிப் பெருமிதம் அடைய வேண்டும் சேவகரிடம் தன் தாழ்மையைச் சொல்லவேண்டியதாயிற்று. அந்தோ பாவம் அபிவீக்ஷ்ய சொல்லும்போது, நாற்புறமும் ஒரு கண்ணோட்டம் விட்டுச் சொல்லுகிறான். யாரேனும் அருகிருப்பார் இதைக்காணில் நாணும்படி இருக்குமே யமனுக்கு! அல்லது, தான் சேவகனைப் பார்க்கிற பார்வையிலேயே கார்ய கௌரவமெல்லாம் தோற்றும்படி அவ்வளவு மருண்டு கனிந்து நோக்குகிறான் யமன் என்னவுமாம். வததி யம: தஸ்ய கர்ணமூலே—பாவமூட்டையைப் பிரித்து அநுபவிக்க பலவாயிரம் ஆத்மாக்கள் அங்கு நரகத்தில் நித்யவாஸம் செய்யும்படி இருக்குமே. "விஷ்ணு பக்தர்களை நீவிட்டுப்போரு' என்றாற்போல் வார்த்தை சொல்லத் தொடங்கும்போது "விஷ்ணு" என்னும் சொல் அங்குள்ளவர் செவியுட் புகுமாகில், என் பெயரைக் கேட்டார்கள் "இவர்கள் என்னுரைச் சொன்னார்கள், என்று ஏதோ ஒருவ்யாஜத்தால் அவர்களை நிஷ்பாபராக்கி எம்பெருமான் கைக்கொள்ள நினைக்குமாகில் தன் ராஜ்யம் நிர்விஷயமாம். நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடையநம்பியன்றோ அவன்? என நினைத்து "விஷ்ணு பக்தர்களை" என்று தொடங்கும் முன் சொன்ன வார்த்தையைச் சேவகன் செவியோடு தன் முகம் சேர்த்துச் சொல்லுகிறானும் யமன். 'பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹம் அந்யந்ருணாம் நவைஷ்ணவாநாம்.' மதுஸூதனன் திருவடிகளை சரணமென்று அத்யவஸித்தவர்களை பரிஹரித்துப்போவாய். இவர்களை நலிந்தால் அவனுக்கென்? என்னவொண்ணாது. இவர்கள் அவனிடம் ந்யஸ்தபரர்கள். இவர்களுக்கு நேர்ந்த கேடொன்றுக்கு, அவன் மார் தட்டி வருவான். மது என்னும் அஸுரனுக்கு என்ன கதி நேர்ந்தது என்று நினை. உம்மைச் சேர்ந்த நாங்கள் பிறருக்கும் அஞ்சவேண்டி இருந்ததாகில், நீர் யாராயிருந்து எங்களை ஏவுகிறீர்என்ன, 'ப்ரபுரஹம் அந்யந்ருணாம்' நான் வைஷ்ணவர் அல்லாதாருக்குக் கடவன். அவ்விஷயத்தில் என் ஆஜ்ஞாபங்கம் பிறந்ததாகில் அன்றோ நீங்கள் கவலைகொள்ளவேணும். நான் கடவனல்லாத விஷயத்தில் என்ன ஆராய்ச்சி வேணும்? என்று யமன் தன் படனை வைஷ்ணவர் விஷயத்தில் எச்சரித்தானும்.

இது விஷயமாய் பரமரஸமான ஓர் ஐதிஹ்யம் முன்னோர் மொழிந்துள்ளனர். பெருமாளுடைய ஒரு திருவேட்டை உத்ஸவத்தில் பட்டர், திருவூற்றங்கரையிலே பேரோலக்கமாய் இருந்து பெருமாள் வடிவழகில் ஈடுபட்டு மெய்மறந்துத் தொழுது நிற்க, அவ்வவஸரத்தில், கர்மமாத்ரப்ரதானரான சிலர்வந்து பட்டர் ஸந்நதியில் "ஸந்த்யையானது" என்று விண்ணப்பித்தனராம். அப்போது அவர்களுக்கு பட்டர் "நாம் பெருமாள் அழகிலே துவக்குண்டு இன்றொருநாள் கர்த்தவ்யத்திலே அல்பம் தாழநின்றோமாகில் இது குற்றமாக யமன் கேட்கவோ? ஒரு ராஜா இருந்து நாட்டுக் கணக்குக் கேட்டுக் கொண்டுவாரா நின்றால் ராஜாவுக்கு அந்தரங்கனாயிருப்பான் ஒருவன் பேரை, குற்றப்பட்டியலில், கணக்குப்பிள்ளை வாசித்தால், அப்போது ராஜா. "ஓங்காண்! அது கிடக்க. மேற் சொல்லும் என்றால், பின்னை ஒருக்காலும் அப்பேர் எடுத்து வாசிக்கப் பெறாது காண்" என்று பதில் அருளிச் செய்தாராம். இவ்வித ஐதிஹ்யங்களை எழுதி வைத்த பூர்வாசார்யர்களே மற்றோரிடத்தில் "பாஷ்யகாரர் தமது அந்திமதசையிலும் ஸந்த்யாகாலத்தில் வருந்தி எழுந்திருந்து ஜலாஞ்ஜலி ப்ரக்ஷேபம் பண்ணியருளினார்" என்கிறார்கள். ஆக ஒரு விஷயத்தை சடக்கென முடிவு செய்யாமல் எல்லாவற்றையும் நன்கு பராமர்சித்து நிதானித்து முடிவு கட்டுவது மிகவும் சிறந்தது. ஸாக்ஷாத்பகவத்கைங்கர்யம் ப்ராப்தமாகும்போது பரம்பரையாய் கைங்கர்யத்தில் முடியும் ஸந்த்யோபாஸநம் போன்றவைகளுக்குச் சிறிது கால விளம்பம் ஆயினும் பாதகமில்லை என்று தான் முன் ஐதிஹ்யம் வெளியிடுகிறது. ஆக இவ்வளவால் வைஷ்ணவனாய்ப் பிறந்தபெருமை யதாசக்தி பேசப்பட்டது.

ஸ்ரீ:

செய்திகள்

ஆசார்யஜயந்தி மஹோத்ஸவங்கள்

திருமலை

ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தையும் அநுக்ரஹத்தையும் முன்னிட்டு திருமலை அஹோபிலமடத்தில் ஹேமலம்பி ௵ புரட்டாசி மீ 9உ முதல் 10 தினங்கள் ஸ்ரீ திருவேங்கடமுடையான்ப்ரஹ்மோத்ஸவததியாராதனமும் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிக ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகர்களின் திருநக்ஷத்திரமஹோத்ஸவங்களும் வெகு விமரிசையாக நடந்தேறியது. பிரதி தினமும் ஆயிரக்கணக்கான தேசாந்திரி ஸேவார்த்திகளுக்கு பங்க்தி பங்க்தியாக ததீயாராதனம் நடந்தது. வேத பாராயணமும் நாலாயிர, தேசிகப்ரபந்த, ஸ்ரீ ஸந்நிதிப்ரபந்தபாராயணங்களும் நடந்து சாற்றுமுறைகளும் அத்யாச்சரியமான ரீதியில் நடந்தன. பாராயணங்களுக்கு வெளியிடங்களிலிருந்து ஸ்வாமிகளை வரவழைத்து விசேஷமாக ஸம்பாவனை செய்யப்பட்டது. இங்கு எழுந்தருளியிருந்த அத்யாபகபாராயணஸ்வாமிகளால் ஸ்ரீ திருவேங்கடமுடையான் ப்ரஹ்மோத்ஸவபாராயணகோஷ்டி சிறந்து விளங்கியது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ ஸந்நிதி ஆராதகர் ஸ்ரீ. உப. சேட்லூர், வித்வான், ராஜகோபாலாசாரியர்ஸ்வாமி, மைஸூர், பரகால மடம் ஆஸ்தானவித்வான், ஸ்ரீ. உப. தீக்ஷாசாரியர்ஸ்வாமி முதலிய பண்டிதர்களுடைய உபந்யாஸங்களும் நடைபெற்றன. இவ்வளவு விமரிசையாக இம் மஹோத்ஸவங்களை நடத்தி வரும்' திருமலை ஸ்ரீ அஹோபிலமடம் முத்ராகர்த்தாவும் ஏஜண்டுமான ஸ்ரீ.உப. சேட்லூர் வேதாந்தாசாரியர் ஸ்வாமி ஸகலவித ஏற்பாடுகளையும் மிக ப்ரயாஸையுடன் செய்துள்ளது பாராட்டத்தக்கது. ஸ்ரீ திருவேங்கடமுடையானுடையவும் ஸ்ரீமதழகியசிங்கருடையவும் அநுக்ரஹத்தினால் மேன்மேலும் விசேஷமாக இந்த மஹோத்ஸவங்கள் நடைபெறவேண்டும் என்று ஸரண்யனை ப்ரார்த்திக்கிறேன்.

பு. வ. வரதராஜன்,
சிரோமணி & அத்யாபகர்

திருவல்லிக்கேணி.

திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிக ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகர்களின் வார்ஷிகமஹோத்ஸவம் ஹேவிளம்பி வருஷம் புரட்டாசி மாதத்தில் 20 நாட்கள் மிகச்சிறப்பாக நடந்தது. இவ்வருஷம் திருவல்லிக்கேணி ஸத்ஸங்கத்தார் துளசிங்கப்பெருமாள் கோவில் தெருவில் 2 பூப்பந்தல்களை அமைத்தும் லைட் ஏற்பாடுகளும் செய்தது தவிர இரு உத்ஸவங்களிலும் ப்ரதிதினமும் காலை மாலை புறப்பாடுகளில் வேதபாராயண அத்யாபக கோஷ்டிகளுக்கு சந்தனம், பழம், சர்க்கரை விநியோகம் செய்தனர். சில தினங்களில் வஸ்திரங்களும் பட்டும் ஸமர்ப்பித்தார்கள். திருவல்லிக்கேணி இளைஞர் காங்கிரஸ் கோஷ்டியார் கங்கைகொண்டான் மண்டபம் பூப்பந்தலில் லைட் ஏற்பாடு செய்திருந்தனர். புரட்டாசி மீ 13உ ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் சாத்துமுறையன்று சென்னை சட்டசபை மெம்பர் ஸ்ரீ. R. கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார் ஓர் தகடி ஸமர்ப்பித்தார். புதியதாகச் செய்த மங்களகிரியில் அன்றிரவு புறப்பாடு பாணவேடிக்கையுடன் நன்கு நடந்தது. ஸ்ரீ தேசிகன் உத்ஸவத்தில் நான்காவது நாள் ராத்திரி சந்திரப்ரபையில் ஸ்ரீ ராஜாமணி கோஷ்டியார் இதுவரை நடைபெறாத முறையில் தீவட்டி, பாணவேடிக்கைகளுடன் வீதி உத்ஸவம் நடத்தியது குறிப்பிடத்தகுந்தது. ஆறுவது உத்ஸவம் முழுதும் வழக்கம்போல் ஸ்ரீ நிகமாந்ததேசிக ஆஸ்திகஸபையார் வெகு உத்ஸாஹத்துடனும் சிரத்தையுடனும் நடத்தி வைத்தார்கள். இரண்டு சாத்துமுறையிலும் மத்தியானத்தில் ததீயாராதனை விசேஷமாக நடந்தது. ஸ்ரீ தேசிகன் சாத்துமுறையன்று ராத்திரி உத்ஸவம் சென்னை 'சுந்தரம் மோட்டார்ஸ்' கம்பெனியாரால் சென்றவருஷங்களைவிட உயர்ந்த முறையில் புஷ்பமாலைகளுடன் விமரிசையாக நடத்தப்பட்டது. புறப்பாட்டிற்கு முன் விலையுயர்ந்த தகடி ஒன்றும் ஷை கம்பெனியாரால் ஸமர்ப்பிக்கப்பட்டது. இம் மஹோத்ஸவங்களை பக்தர்கள் குழுமியிருந்து 'கண்டோம் கண்டோ' மென்று ஸேவித்து

மகிழ்ந்தார்கள். ஸ்ரீ மாலோலனின் கிருபையாலும், ஸ்ரீமதழகியசிங்கரின் பரிபூர்ணநுக்ரஹத்தாலும் இவ்விரு மஹோத்ஸவங்களும் நிர்விக்னமாக நடந்தேறின. பிரதி வருஷத்தைக் காட்டிலும் இவ் வருஷம் உபயகோஷ்டிகளுக்கும் ஸ்வாமிகள் அதிகமாக எழுந்தருளியிருந்து நன்கு கைங்கர்யம் செய்தனர். திருக்குடந்தை ஸ்ரீ, கே, எஸ், பாட்ராசாரியார் ஸ்வாமி உத்ஸவம் முழுவதும் வேதபாராயண கோஷ்டியில் தவராமல் முதன்மையாயிருந்து கைங்கர்யம் செய்தது குறிப்பிடத்தக்கது. சாற்றுமுறை முடிந்ததும் பாராயணம் செய்த ஸ்வாமிகளுக்கு வழக்கம்போல் ஸம்பாவனை செய்யப்பட்டது. இந்த திவ்யதேசத்தில் நம் ஆசார்யோத்தமர்களின் மஹோத்ஸவங்களை மிகவும் பக்தி சிரத்தைகளுடன் 'தேவமிவ ஆசார்யம் உபாஸீத' என்றபடி வைசாகோத்ஸவாதிகளைப்போலே நடத்தி வைத்த இவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடம் கௌரவ ஏஜண்டு ஸ்ரீ. N. G. கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமிக்கு ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ஹத்தால் மேன்மேலும் இம்மஹோத்ஸவங்களை விசேஷித்து நடத்துவதற்கு வேண்டிய ஸகல ச்ரேயஸ்ஸுகளும் உண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஓர் தேசிகபக்தன்.

பெருகவாழ்ந்தான்

இவ்வூர் ஸ்ரீ பட்டாபிராமஸ்வாமிகோயிலில் 3-10-57 வியாழக்கிழமை திருவோணத்தன்று ஸ்ரீ பட்டாபிராமஸ்வாமி கோயில் தர்மகர்த்தாக்களில் ஒருவரான ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி ஸ்ரீ வேதாந்த தேசிகனுக்குக் காலையில் திருமஞ்ஜசனமானதும் ஸ்ரீ அஹோபிலமடம் தோளுக்கினியானில் எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ பட்டாபிராமன், ஸ்ரீ கோதண்டராமன், ஆழ்வார் ஸந்நிதிகளில் மங்களாசாஸனம் ஆன பிறகு புறப்பாடு நடந்து ஸேவை சாற்றுமுறைகள் விமரிசையாக நடந்தது. ஸுமார் 30 வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீ தேசிகன் புறப்பாடு மங்களாசாஸனம் இங்கு ஸ்ரீ அஹோபிலமடத்தில் நடத்தினது குறிப்பிடத்தக்கது.

எஸ். சாரங்காச்சாரியர்,
லோகல் ஏஜண்டு, காரியஸ்தர்.

ஸ்ரீ வேதாந்ததேசிக ஸம்ப்ரதாய ஸபை
மாதுங்கா, பம்பாய்.

ஸர்வஜ்ஞனை ஸர்வேச்வரனும் காணமாட்டாத கைம்மாறையுடையவர்களாயும், ஸாக்ஷாதுபதேசங்களாலும் க்ரந்தரூபமான அநுக்ரஹத்தாலும் அடைந்தவர்களுடைய மனத்தில் அஜ்ஞானாதிகளை அகற்றி, ஜ்ஞானவிளக்கை ஏற்றி, பகவத்பரிக்ரஹத்திற்கு யோக்யர்களாகப் பண்ணும் பெருமைகளையுடைய மஹோதாரர்களான ஆசார்யர்களுடைய உபகார ஸ்ம்ருதிரூபமான அவதாரோத்ஸவாதிகளை யதாசக்தி கொண்டாடுவது எல்லோருக்கும் ஸ்வரூபப்ராப்த கைங்கர்யமாகையால், அத்தகைய ஆசார்யஸார்வபௌமர்களான ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகனுடையவும், ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடையவுமான வார்ஷிகதிருநக்ஷத்ரமஹோத்ஸவங்கள் இவ்விடம் நப்புஹால் என்னுமிடத்தில் இந்த ஸபையோரால் கடந்த வருஷங்கள் போல் வேதபாராயண, திவ்யப்ரபந்த, ஸ்தோத்ர பாட ஸேவை சாற்றுமுறைகளுடன் 23-9-57 லிருந்து 3-10-57 வரையில் பத்து தினங்கள் விசேஷமாகக் கொண்டாடப்பட்டன. இவ்விடமுள்ள ஸ்ரீவைஷ்ணவ ஸ்த்ரீபுமான்கள் விசேஷமான பக்திச்ரத்தையுடன் 10 தினங்களும் திரளாக வந்திருந்து உத்ஸவங்களைச் சிறப்புற நடத்தி வைத்தார்கள். இவ் வருடம் ராஜமன்னார்கோயில் கனபாடி, ஸ்ரீ. உப. வேதஸேவதி, தர்மஜ்ஞ, நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி அந்வயித்து, முதல் நாள் 'தர்மம்' என்னும் விஷயத்தையும், எட்டு நாட்கள் ஸ்ரீமத்ராமாயணத்தைப்பற்றியும், கடைசி நாள் 'ஆசார்ய வைபவம்' பற்றியும் அழகாக உபந்யஸித்தார். பாராயணத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கும் உபந்யாஸகருக்கும் யதாசக்தி ஸம்பாவனை பண்ணப்பட்டு ததீயாராதனத்துடன் இனிது முடிவு பெற்றது.

இவ் வருஷம் ஒரு முக்கிய ஸம்பவமாக சிறுவர்களுக்குள் நடந்த ஸ்தோத்ரபாடப் போட்டியைக் குறிப்பிட வேண்டும். இந்தப்போட்டியில் 12 சிறுவர்களும் சிறுமிகளும் உத்ஸாஹமாகப் பங்கெடுத்துக் கொண்டனர். இவர்களை

ஸ்ரீ. உப. மன்னார்குடி கனபாடி ஸ்வாமியும், ஸ்ரீ. உப. எஸ். எஸ். ராஜகோபால ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. ஆராவமுதய்யங்கார் ஸ்வாமியும் பரீக்ஷித்தார்கள். சாற்றுமுறையன்று ஸபையோரால் வெளியிடப்பட்ட ஸ்தோத்ர பாடபுஸ்தகங்கள் குழந்தைகளுக்ுப் பாரிதோஷிகமாக வழங்கப்பட்டன. ஐந்துக்கு அதிகமான ஸ்தோத்ரபாடங்களில் பரீக்ஷை கொடுத்த பெண்ணுக்கு அதிகப்படியாக ரூ. 5. ஸன்மானமும் கொடுக்கப்பட்டது. அடுத்த உத்ஸவத்தில் இன்னும் அதிகமான குழந்தைகள் இதில் பங்கெடுத்துக்கொண்டு ஸ்தோத்ரங்களைப் பரவச் செய்வார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது.

N. சடகோபாசாரியர்.

P. R. ஸ்கோயர், சென்னை

இந்தப் பேட்டையிலுள்ள தேசிகபக்தர்கள் ஸ்ரீ மங்கிகமாந்தமஹாதேசிகனின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை புரட்டாசிமீ 17உ முதல் பத்து தினங்கள் விசேஷமாகக் கொண்டாடினார்கள். ப்ரதி தினம் காலை 4-30 மணிக்கு ஸ்ரீ தேசிகப்ரபந்தங்களையும் ஸ்தோத்ரபாடங்களையும் ஸ்ரீமான், டாக்டர், Y. C. செல்லப்பா ஸ்வாமியின் திருஹத்திலிருந்து கோஷ்டியாக புறப்பட்டு முக்கிய வீதிகளில் அநுஸந்தித்துக் கொண்டு ஷை திருஹத்தில் முடிக்கப்பட்டு வந்தது. புரட்டாசிமீ 26உ சாற்றுமுறையும் வெகு சிறப்பாக நடந்தேறியது. இப் பேட்டையிலுள்ள தேசிகபக்தர்கள் தினந்தோறும் தவறாது அந்வயித்து போற்றியுகந்து புந்தியுட் கொண்டு தன்யரானார்கள்.

M. Y. சேஷாத்திரி, அத்யாபகர்.

ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திருநக்ஷத்ரமஹோத்ஸவமும் சாற்றுமுறையும் ஸ்ரீமதழகியசிங்கர் நியமனப்படி ஸ்ரீ வில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி, திருக்குறுங்குடி, திருவனந்தபுரம், காருக்குரிச்சி முதலியவிடங்களில் ஸேவை சாற்றுமுறைகளுடன் வெகுவிமரிசையாக நடந்தேறியது. ஆங்காங்குள்ள சிஷ்யகோடிகள் யதாசக்தி அந்வயித்து க்ருதார்த்தர்களானார்கள் என்பதாக அந்த ப்ராந்திய ஸௌரவ ஏஜண்டு, ஸ்ரீ. உப. காருக்குருச்சி, G. கோபாலஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி தெரிவிக்கிறார்.

உத்தான மஹோத்ஸவம்

ஸ்ரீரங்கம் பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரமத்தில் ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதிபாய் எழுந்தருளியிருக்கும் வெண்ணாற்றங்கரை ஆண்டவனின் உத்தான மஹோத்ஸவம் 10–9–57-ல் நடந்தது. ரிடையர்ட் ஜட்ஜ், ஸ்ரீ. உப. ராகவ ஐயங்கார் ஸ்வாமியின் ப்ரார்த்தனைக்கிணங்கி 'ஸ்ரீ ரங்கசரணம்' என்னும் அந்த ஸ்வாமியின் பங்களாவிற்கு எழுந்தருளியாயிற்று. அன்று அந்த ஸ்வாமி ஆராதித்தார். அன்றிரவு உத்தானத்தை முடித்துக்கொண்டு ஆச்ரமத்திற்கெழுந்தருளியாயிற்று.

பொன்மலை, ராமஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:

புத்தக விமர்சம்

ஸ்ரீ அழகியசிங்கர் டில்லிமாநகருக்கு எழுந்தருளிய ஸமயம் ஸ்ரீ. உப. வித்வான், காளி, ரங்காசாரியர் (ஓய்வு பெற்ற புதுக்கோட்டை தானாதிகாரி) ஸ்வாமியால் ஸமர்ப்பிக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தில் 117 ச்லோகங்கள் உள்ளன. ஸ்ரீ அழகியசிங்கரின் திருவவதாரம் துடங்கி ஆஸேதுஹிமாசலம் ஸஞ்சாரம் செய்துள்ளதையும் ஸ்ரீ அழகியசிங்கரின் வைபவத்தையும் விலக்ஷணமான முறையில் ஸ்வல்பமான ஸம்ஸ்க்ருத பரிசயமுள்ளவர்களுக்கும் புரியும்படி இயற்றியிருக்கிறார். இந்தப் புஸ்தகம் டில்லி ஸ்ரீ அழகியசிங்கர் வரவேற்புக் கமிட்டியாரால் வெளியிடப்பட்டுள்ளது.

[ந. பு. க்ருஷ்ணமாசாரி]

கிடைக்குமிடம்:—
வித்வான், காளி, ரங்காசாரியர்,
4/45. V. E. A.
கரோல் பாக், புது டில்லி.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[ஹேமலம்பி ஸ்ரீ தக்ஷிணாயநம் - சரத் ருது, துலா மீ 1957 ஸ்ரீ அக்டோபர் – நவம்பர்மீ]

17-10-57	ஐப்பசி 1வ	வியாழக்கிழமை	துலாரவி. 9-37. ஸங்க்ரமண தர்ப்பணம். சூன்யதிதி.
19-10-57	3வ	சனிக்கிழமை	ஏகாதசி.
21-10-57	5வ	திங்கட்கிழமை	த்ரயோதசி- சதுர்தசி திதித்வயம், ராத்திரி நரகசதுர்தசி ஸ்நாநம்.
22-10-57	6வ	செவ்வாய்க்கிழமை	● அமாவாஸ்யை. தீபாவளி.
27-10-57	11வ	ஞாயிற்றுக்கிழமை	மூலம். 11-வது பட்டம் ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
29-10-57	13வ	செவ்வாய்க்கிழமை	பூராடம். ஸேனைமுதலியார் திருநக்ஷத்ரம்.
31-10-57	15வ	வியாழக்கிழமை	திருவோணம். பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்.
1-11-57	16வ	வெள்ளிக்கிழமை	அவிட்டம், பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்.
2-11-57	17வ	சனிக்கிழமை	சதயம், பேயாழ்வார் திருநக்ஷத்ரம், ஏகாதசி திதி.
3-11-57	18வ	ஞாயிற்றுக்கிழமை	உத்தான ஏகாதசி, அதிதி
7-11-57	22வ	வியாழக்கிழமை	○ பூர்ணிமை, சந்த்ரக்ரஹணம்.
14-11-57	29வ	வியாழக்கிழமை	ஸப்தமி-அஷ்டமி திதித்வயம்.
15-11-57	30வ	வெள்ளிக்கிழமை	துலா க்ருஷ்ண நவமிதிதி.

[தக்ஷிணாயநம் - சரத்ருது - வ்ருச்சிக மீ]

16-11-57	கார்த்திகைமீ 1வ	சனிக்கிழமை	வ்ருச்சிக ரவி 3-44, விஷ்ணுபதி, ஸங்க்ரமண தர்ப்பணம், வ்ருச்சிகக்ருஷ்ணதசமிதிதி.
17-11-57	2வ	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி திதி-
18-11-57	3வ	திங்கட்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
21-11-57	6வ	வியாழக்கிழமை	● அமாவாஸ்யை.
25-11-57	10வ	திங்கட்கிழமை	**பூராடம், 43-வது பட்டம் ஸ்ரீ வீரராகவ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்,**
26-11-57	11வ	செவ்வாய்க்கிழமை	உத்திராடம், **34**-வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

குறிப்பு:- ஐப்பசி மீ 22வ [7-11-57] சந்த்ரக்ரஹணம். பூர்ணிமா திதி சிராத்தத்தை மறுநாள் செய்யவேணும். க்ரஹண தினத்தன்று ஸூர்யோதயத்திலிருந்து 3 மணி காலத்திற்குள் [காலை 9 மணிக்குள்] போஜனம் செய்யவேணும்.

க்ரஹணகாலம்:

	இரவு மணி நி.		இரவு மணி நி.
ஸ்பர்சம்	6-12	உன்மீலனம்	8-12
நிமீலனம்	7-42	மோக்ஷம்	9-41
மத்யகாலம்	7-57		

Regd. No. M. 4437.

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907.)

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு, மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்டரி.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் விளம்பரம் செய்வோருக்கு அடியிற் கண்டபடி கட்டண விகிதங்களில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அட்டை 4-வது பக்கம் முழுவதும் ஒரு தடவைக்கு		ரூ 25—0—0
அட்டை 3-வது பக்கம் முழுவதும் ஒரு தடவைக்கு		ரூ 20—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 250—0—0
அரை ஸூ த்திற்கு		ரூ 125—0—0
உள்பக்கங்களில்:	ஒரு பக்கம் ஒரு தடவைக்கு	ரூ 20—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 200—0—0
அரை வருஷத்திற்கு		ரூ 100—0—0

அரை, கால் பக்கங்களுக்கும், மற்றும் சலுகை விளம்பரங்களுக்கும், மற்ற நியமங்களுக்கும் மானேஜர், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, திருவள்ளூர் என்ற விலாஸத்திற்கு எழுதவும்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.